## அத்தியாயம் 10

# புது சிருஷ்டியின் ஞானஸ்நானம்

இரண்டாம் நூற்றாண்டில் உள்ள ஞானஸ்நானம் – ஞான ஸ்நானத்தின் ஆதரவாளர்கள்–ரோம சபையின் ஞானஸ்நான சடங்காச்சாரங்கள் – குழந்தை ஞானஸ்நானம், ஏன் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது – ஞானஸ்நானத்தைக் குறித்து வேத வாக்கியங்களின் சாட்சி –''சீஷர்கள்'' சபையின் கருத்து – ''பேப்டிஸ்ட்'' சபையின் கருத்து – உண்மையான கருத்து – கிறிஸ்துவின் மரணத்துக்குள்ளான ஞானஸ்நானம் – ''எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்''– அக்கினி ஞானஸ்நானம் – தண்ணீரால் செய்யப்படும் அடையாள ஞானஸ்நானம் – அடையாள ஞானஸ்நானம் அவசியமா? – சரியான அடையாளம் – யார் அதைக் கொடுக்கலாம் – உபயோகப்படுத்தப்படவேண்டிய வார்த்தைகள் – அடையாளத்தை திரும்பத் திரும்ப உபயோகிப்பது – ''மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம்''

ஞானஸ்நானத்தை கொடுக்கும் முறையிலும், அதனுடைய முக்கியத்துவத்தைக் குறித்தும் குழப்பமும், பல விதமான கருத்துக்களும் இருந்தாலும், புதிய ஏற்பாடு ஞானஸ்நானத்தை கற்றுக் கொடுக்கிறது என்பதை புரிந்து கொள்வதில் கிறிஸ்தவ மக்கள் ஒன்றுபட்டு இருக்கிறார்கள்.

புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர்கள் மறைமுகமாக குறிப்பிட்டிருந்த விசுவாச துரோகம் என்பது, இரண்டாம் நூற்றாண்டு அளவில் பரவி, அந்த காலங்களில் பேர் சபையில், அறியாமையினால் ஞானஸ்நானத்தைக் குறித்து மூட நம்பிக்கைகள் முக்கிய இடத்தைப் பெற்று விட்டன. தண்ணீர் ஞானஸ்நானம் பெறும்போது, பழைய

பாவங்கள் நீக்கப்பட்டு அந்த நபரை தேவனோடு உறவு முறைக்கு கொண்டு வருவதாக இருந்தது மாத்திரமல்ல, அதன் மூலம் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினர் என்ற முறையில் சில கிருபைகளை அல்லது நன்மைகளைக் கொண்டு வருவதாகவும் இருந்தது, இப்படியில்லாத பட்சத்தில் அவைகள் கிடைக்காது என்றும் இருந்தது. ஆகவே, அந்த ஆரம்ப நாளில் விசுவாசிகள் தங்களுக்கென ஞானஸ்நானத்தை நாடினது மாத்திரமல்ல, தங்கள் குழந்தைகளுக்கும் வேண்டும் என்றார்கள். ஆனால் குழந்தைகளால் விசுவாசிக்கவோ, தாங்களாகவே உடன்படிக்கையின் வாக்குத்தத்திற்குள் பிரவேசிக்கவோ இயலாததால், பெற்றோர்களைத் தவிர மற்றவர்களும் கூட, இப்படிப்பட்ட பிள்ளைகளுக்கு முன்வருபவர்களாக, ''ஆவிக்குரிய பெற்றோர்களாரும்படி'' ஒரு ஒழுங்கு ஏற்படுத்தப்பட்டது. பிள்ளைகள் ஆண்டவரை விசுவாசிக்க வேண்டும், அவருடைய வழியில் நடக்க வேண்டும் என்று பயபக்தியுடன் வாக்கு பண்ணினதோடு, அவர்களுடைய பக்தி வளர்ச்சியில் முன்னேற்றம் அடையும் பொறுப்பையும் தாங்களே கவனித்துக் கொள்வோம் என்றார்கள். இவர்கள் ஞானதகப்பன் என்றும் ஞானதாய் என்றும் அழைக்கப்பட்டார்கள்.

அக்காலத்திய போதகர்களும், போதிப்பவர்களும், பாரம்பரியங்களிலும், சின்னங்களை விரிவுபடுத்தும் காரியங்களிலும், அவைகளின் அர்த்தத்தை கூறுவதிலும் மிக துரிதமாக வளர்ச்சி பெற்றார்கள். மூன்றாவது நூற்றாண்டில் ஆலயங்களுக்கு வெளியில் ஞானஸ்நான காரியங்களுக்காக விசேஷமாக ஞானஸ்நானத் தொட்டிகள் கட்டப்பட்டன. அவைகள் ஒரு தனி அறையை ஒட்டி வெளிப்புறத்திற்கு வரும்படியாக வசதியுள்ள இன்னொரு முற்றமும் கட்டப்பட்டன. இந்த முற்றம் பொது மக்களுக்குரிய இடம், இதில் அவர்கள் முன்னிலையில் ஞானஸ்நானத்திற்கான உறுதிமொழிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன, அதன் பின்னர், அந்த நபர் ஞானஸ்நான தொட்டியில் தனியான முறையில் ஞானஸ்தானத்தைப் பெற்றுக் கொண்டார். ஞானஸ்நானத்தை நடத்துகிற ஊழியக்காரர், ஞானஸ்நானம் பெற வந்தவரிடத்திருந்து பிசாசுகளை விரட்டுவதற்காக, பிதா, குமாரன், பரிசுத்த ஆவிக்கு அடையாளமாக அவருடைய முகத்தில் மூன்று முறை ஊதினார். ஞானஸ்நானத்திற்கு என்று வைக்கப்பட்டிருந்த தண்ணீர் பரிசுத்தமானது என்ற அர்த்தத்தில் ஒரு விரிவான ஒழுங்கு முறையின்படி புனிதப்படுத்தப்பட்டது. அந்த ஒழுங்கு முறையில் ஒரு பகுதி,





தண்ணீரிலிருந்து அசுத்த ஆவிகளை விரட்டுவதற்கான முறைகளை கையாளுவதாகும். பழைய மனுஷனை களைந்து எறிவதற்கு அடையாளமாக ஞானஸ்நானம் பெறுவரின் உடைகள் எல்லாம் அகற்றப்பட்டன; அதன் பின்னர் மூன்று முறை, ஒரு முறை பிதாவின் நாமத்திலும், ஒரு முறை குமாரனின் நாமத்திலும், ஒரு முறை பரிசுத்த ஆவியின் நாமத்தினாலும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. இந்த ஞானஸ்நானம் ஆலயத்திற்கு வெளியே கொடுக்கப்பட்டது, அவன் இன்னமும் ஆலயத்தின் ஒரு அங்கத்தினன் அல்ல; மேலும், இப்படியான ஒரு ஒழுங்கின்படியில்லாமல் அவன் அங்கத்தினன் ஆக முடியாது என்பதைக் காட்டுவதற்காக அவ்வாறு செய்யப்பட்டது. ஞானஸ்நான ஆராதனை முடிந்த பின்னர், வருகின்ற ஞாயிற்றுக்கிழமை வரை, அங்கத்துவத்திற்காக வெள்ளை ஆடைகள் அணிய வேண்டும். பிற்காலத்தில் ஞானஸ்நானம் ஆலயத்திற்கு வெளியே தனித்து வைப்பது நின்று விட்டது, ஞானஸ்நான தண்ணீர் தொட்டிகள் ஆலயத்திற்குள் கட்டப்பட்டன.

ரோமன், கிரேக்க கத்தோலிக்கர்கள், நம்முடைய காலத்திற்கு உகந்த சில மாற்றங்களை செய்துவிட்டு, மூன்றாம் நூற்றாண்டு காலத்திய விரிவான சடாங்காச்சாரங்களை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, இன்னுமும் பின்பற்றி வருகிறார்கள். ரோம சபையின் ஞானஸ்நான சடங்காச்சாரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன, ஆனாலும் அவைகள் எல்லாம் உலகளவில் பின்பற்றப்படவில்லை.

1) குழந்தை, சபை இல்லாமல் வைக்கப்பட்டிருப்பதின் நோக்கம், உண்மையிலேயே அது பரலோகத்திலிருந்து வெளியே வைக்கப் பட்டிருக்கிறது என்பதைக் காட்டுவதற்காக. சபை பரலோகத்திற்கு அடையாளமாக உள்ளது.

2) குருவானவர் குழந்தையின் முகத்தில் மூன்று முறை ஊதுகிறார், இப்படிச் செய்வது தேவனுடைய ஆவியால் மாத்திரமே பிசாசை விரட்ட முடியும் என்பதை குறிப்பதற்காக ஆகும்.

3) சிலுவையின் அடையாளம் குழந்தையின் நெற்றியிலும், மார்பிலும் போடப்படுகின்றது.

4) உப்பை, அசுத்த ஆவிகள் விரட்டுவதற்கான சடங்காச்சாரத்திற்கு பின்னர் பாலகனின் வாயில் போட்டு, அதனால் ஞானம் அவனை சீரழிவிலிருந்து பாதுகாக்கும் என்பதை குருவானவர் காட்டுகிறார்.

5) குழந்தையிலுள்ள அசுத்த ஆவிகள் விரட்டப்பட்டது.

6) ''எப்பாத்தா'' என்ற வார்த்தையை உச்சரித்த வண்ணம், குருவானவர் அவனுடைய வாயையும் காதுகளையும் எச்சிலினால் தொடுகிறார்.

7) குழந்தை ஆடை இல்லாமல் இருக்கிறது, பழைய மனுஷனை களைந்து விட்டதற்கு அடையாளமாக.

8) குழந்தையை முன்பாக கொண்டு வருபவர்கள், சபைக்கு அடையாளமாக இருக்கிறார்கள்.

9) பிசாசையும் அவன் கிரியைகளையும் வெளியே அப்புறப்படுத்துவது செய்யப்பட்டது.

10) அவன் எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுகிறான்.

11) விசுவாச அறிக்கை செய்யப்படுகிறது.

12) அவன் ஞானஸ்நானம் பெறுவானா என்ற கேள்வி கேட்கப்படுகின்றது.

13) ஏதாவது ஒரு பரிசுத்தவானின் நாமம் அவனுக்கு கொடுக்கப்படுகிறது, அவர் அவனுக்கு முன் மாதிரியாகவும், பாதுகாவலராயும் இருப்பார்.

14) அவர் மூன்று முறை தண்ணீருக்குள் போடப்படுகிறான் அல்லது தண்ணீர் அவனுடைய தலையின் மேல் ஊற்றப்படுகிறது.

15) அவன் சமாதானத்திற்கான முத்தத்தைப் பெற்றுக் கொள்ளுகிறான்.

16) அவன் தலையின் மேல் அபிஷேகம் பண்ணப்படுகிறான், ஞானஸ்நானத்தின் மூலம் அவன் ஒரு ராஜாவும் ஒரு ஆசாரியனாவும் ஆகிறான் என்பதைக் காட்டுவதற்காக.

17) அவன் வெளிச்சத்தின் பிள்ளையாகிவிட்டான் என்பதைக் குறிப்பதற்காக, எரிகிற ஒரு மெழுகுவர்த்தியை அவன் பெற்றுக் கொள்ளுகிறான்.

18) அவன் வெள்ளைத் துணியில் சுற்றப்படுகிறான், அவனுடைய ஞானஸ்நான தூய்மையைக் காட்டுவதற்காக. (Elliott's Delineation of Romanism, Vol.I, page 240; Roman Catholic Catechism, page 252)





இன்றைக்கு உள்ள பல்வேறு புராட்டஸ்டான்ட் சபைகளின் அமைப்புகளில் 1200 வருடங்களுக்கு மேலாக, அதற்கு முன்னான ஞானஸ்நானத்தைக் குறித்த தவறான முறைகள் நடை பெற்று வந்தன. நிச்சயமாகவே, இந்த காரியங்குறித்து ஓரளவுக்கு தெளிவாக வெளிச்சத்தில் கண்ட ஆண்டவருடைய சில ஜனங்கள் இருந்தார்கள், ஆனால் அப்படிப்பட்டவர்கள் மிகச் சிலராகவே இருந்தார்கள் நாம் சொல்லலாம், ஆனால் சரித்திரத்தின் வாயிலாக அவர்களைக் குறித்தோ அல்லது அவர்களுடைய வேறுபட்ட கருத்தைக் குறித்தோ எந்த விதமான குறிப்பும் நமக்கு கிடைக்க வில்லை. 15வது, 16வது நூற்றாண்டுகளில் உள்ள புராட்டஸ்டான்ட் மக்கள், இந்த மாதிரியாக பாரம்பரியங்களை கொண்டிருந்து, அவைகளில் பங்கு பெற்றார்கள்; அவர்கள் கொண்டிருந்த வலிமையான சடாங்காச்சாரங்களை விட்டு அதிகமாக வெளிவந்திருந்த போதிலும், ஓரளவுக்கு அவர்கள் அதன் செல்வாக்குக்கு கட்டுப் பட்டவர்களாகவும், அதே பொதுவான கருத்துக்களை உடையவர் களாகவும் இருந்து, பழக்கவழங்களைப் பின்பற்றி வந்தது ஆச்சரிய மானதல்ல. இன்றைக்கும் கூட புத்திசாலிகளாயிருக்கிற மக்களுக்கு, மூட நம்பிக்கையினாலே உண்டான பயம் தங்களுடைய குழந்தைகளைக் குறித்து உள்ளது. தங்களுடைய குழந்தைகள் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்னர், பாலகராக இருக்கும் போது, அவர்கள் பாவ மன்னிப்பைப் பெறாமல், சபையில் அங்கத்தினராக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்பாக மரிக்க நேர்ந்தால் அவர்களுடைய நித்தியம் எப்படிப்பட்டதாக இருக்குமோ என்று பயப்படுகிறார்கள். எல்லா சபை பிரிவுகளிலும் சிலாக்கியம், அதிகாரம், அங்கீகாரம் ஆகிய எல்லாவற்றையும் குருவானவர்கள் கைகளிலே வைத்துக் கொள்ள எல்லா விதமான முயற்சிகளும், மூட நம்பிக்கையினால் உண்டான பழக்க வழக்கங் களின்படி மேற் கொள்ளப்பட்டிருப்பதை நாம் காணமுடிந்தாலும், ஒரு பாலகன் ஜீவிக்க இனியும் சாத்தியமில்லை, மரணம் ஏற்படக்கூடும் என்ற ஒரு நிலையில், உடனடியாக ஒரு குருவானவரை அழைத்துவர முடியாத சந்தர்ப்பத்தில், யாரேனும் ஞானஸ்நான ஆராதனையை நடத்தலாம் என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இப்படி ஒரு சிந்தனை வருவதற்கு காரணம் குழந்தையின் நித்திய வாழ்வைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்பதுதான். சாதாரண மக்களின் இப்படியான சிலாக்கியம், இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ரோம, கிரேக்க கத்தோலிக்கர் ஆலயங்களில் கூட ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.6ம்

எட்வர்டு மன்னனின் ஆட்சியின் போது, ஆங்கிலேய சபையில் ( Church of England ) வழிகாட்டியாக உள்ள விதி முறைகளின்படி, இந்த விஷயம் இப்படியாக கூறப்பட்டிருந்தது: ''முக்கிய காரணமும், தேவையும் இல்லாதிருக்கும் பட்சத்தில் ஜனங்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு வீட்டில் ஞானஸ்நானம் கொடுக்கக் கூடாது என்று போதகர்களும் உதவிக்காரர்களும் அவர்களை அடிக்கடி எச்சரிக்க வேண்டும்; அப்படி ஒரு முக்கியமான சந்தர்ப்பம் ஏற்படும்போது அதை அவர்கள் கொடுக்கலாம்.''

ஞானஸ்நானத்தைக் குறித்து கீழ்க்கண்ட விளக்கத்தை அங்கீகரிக்கப்பட்ட கத்தோலிக்க ஞான உபதேச புத்தகத்திலிருந்து (பக். 248) குறிப்படுகிறேன்:– ''முதலாவதாகவும் மிக முக்கியமானதாகவும் செய்யப்பட வேண்டிய புனித சமயசடங்கு ஞானஸ்நானம் ஆகும்;'' ''ஏனெனில் ஞானஸ்நானத்திற்கு முன்பாக எவ்விதமான புனித சமயசடங்கும் பெறலாகாது;'' ''ஏனெனில் ஞானஸ்நானம் இல்லாமல் ஒருவரும் இரட்சிக்கப்படவும் முடியாது.'' ஞானஸ்நானத்தில் ஆதியில் உண்டான பாவமும், ஞானஸ்நானத்திற்கு முன்பாக செய்யப்பட்ட எல்லா பாவங்களும் மன்னிக்கப்படுகின்றன. தற்காலிக மற்றும் நித்திய தண்டனையும் ஞானஸ்நானத்தின் மூலம் இரத்தாகிறது.'' ''ஞானஸ்நானத்தில் நாம் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவது மாத்திரமல்ல, நாம் ஆவிக்குரிய ஒரு விதத்தில் மறுரூபமடைகிறோம், பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளாக்கப்படுகிறோம், பரலோகத்திற்கு சுதந்தரவாளிகளாகிறோம்.''

இந்த விஷயத்தைக் குறித்து லுத்தரன் சபையும் கிட்டத்தட்ட இதே கருத்தை உடையதாக இருக்கிறது.

ஆங்கிலேய திருச்சபை, சற்று வித்தியாசமான சடங்காச்சாரத்தை கொண்டிருந்தாலும், குழந்தை ஞானஸ்நானத்தைக் குறித்து இதே முக்கியத்தை அளிக்கின்றது. பொதுவான ஜெபம் (Book of Common Prayer) என்ற புஸ்தகத்திலிருந்து சில பகுதிகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :–

''பாவத்தை திவ்விய முறையில் கழுவும்படியாக இந்த தண்ணீரை பரிசுத்தப்படுத்தும்; இப்பொழுது ஞானஸ்நானம் பெறப்போகின்ற இந்த குழந்தை உம்முடைய கிருபையின் பரிபூரணத்தைப் பெற்று, உம்முடைய





உண்மையாயிருக்கிற, தெரிந்துக் கொள்ளப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கையில் எப்பொழுதும் நிலைத்திருக்கட்டும்.''

''கிறிஸ்துவின் மந்தைக்குள்ளாக இந்தக் குழந்தையை ஏற்றுக்கொள்ளு கிறோம்; சிலுவை அடையாளத்தினால் அவனை அடையாளமிடுகிறோம்.''

''எனக்கன்பான சகோதரரே, நீங்கள் பார்க்கிறபடி, இந்தக் குழந்தை மறுபடியும் பிறந்து கிறிஸ்துவின் சபைக்குள் இணைக்கப்பட்டுள்ளது. இந்த நன்மைகளுக்காக சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.''

''மிகவும் கிருபையுள்ள பிதாவே, இந்த பாலகனை உம்முடைய பரிசுத்த ஆவியால் மறுபடியும் பிறக்கச் செய்ததற்காக நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.''

பிரஸ்பெட்டெரியன் ( Presbyterian) சபையின் கருத்து இதை விட சற்று கடுமையாக இருக்கிறது. வெஸ்ட் மின்ஸ்டர் கன்ஃபெஷன் (Westminster Confession, Art 28 ) இப்படியாகக் கூறுகிறது.

''ஞானஸ்நானம் என்பது ஒரு புனித சமய சடங்கு ....... கிருபையின் உடன்படிக்கை, பாவ மன்னிப்பு, அவன் கிறிஸ்துவுக்குள் இணைக்கப் படுதல், மறுபிறப்பு முதலியவைகளுக்கு ஒரு அடையாளமாகவும் முத்திரையாகவும் உள்ளது.'' குழந்தையின் பெற்றோர்களில் இரண்டு பேரும் அல்லது ஒருவராவது கிறிஸ்தவர்களாக இருந்தால் மாத்திரமே இது உரித்தாகும் என்றும் மற்ற குழந்தைகளுக்கு அல்ல என்றும் அறிக்கையிடுகிறது. அது தொடர்ந்து கூறுகிறதாவது: ''இந்த ஒழுங்குமுறையை குறைகூறுவதோ அல்லது ஒதுக்கி வைத்துவிடுவதோ ஒரு பெரிய பாவமாக இருந்தாலும், அது இல்லாமல் ஒரு நபரும் மறுபடியும் பிறக்கவோ அல்லது இரட்சிக்கப்படவோ முடியாது அல்லது ஞானஸ்நானம் பெறுபவர்கள் எல்லோரும் சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் மறு பிறப்படைந்திருக்கிறார்கள் என்று கூறக்கூடிய அளவுக்கு கிருபையும் இரட்சிப்பும் அப்படிப் பிரிக்க முடியாதபடி அதற்குள்ளாக இணைக்கப்படவில்லை.''

ஞானஸ்நானத்திற்கு குறைவான முக்கியத்துவத்தைக் கொடுத்து விட்டு, பிரஸ்பெட்டேரியன் சபையினரின் சட்டங்கள், அவர்களுடைய ஊழியக்காரர்களைத் தவிர வேறு எவரையும் இந்த ஊழியத்தை செய்ய அனுமதிப்பதில்லை; மேலும், அதன் ஊழியக்காரர்கள் ஞானஸ்நானத்தைக் குறித்தும் அதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தும் வேளையில், ஒரு சிலரே கடைசியாக சொல்லப்பட்ட விதியை அறிகிறபடியால் சபையின் பாலகர்கள் ஞானஸ்நானம் பெறாமல் மரிப்பதினால் வரும்

விளைவுகளைக் குறித்து பிரஸ்பெட்டேரியன் சபையினரும் மற்றவர்களும் பயப்படுகிறார்கள்.

அமெரிக்காவில் உள்ள மெதடிஸ்ட் (Methodist), புராட்டஸ்டான்ட் எப்பிஸ்கோப்பல் சபையினர் (Protestant Episcopal Church), மற்றும் அநேக நவீன ஸ்தாபனங்களும் கடைசியாக சொல்லப்பட்ட குழந்தை ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தைக் குறித்து சற்று மிதமான இந்த கருத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்கள்.

இந்த கருத்தை விளக்கும்படியாக ஒரு மருத்துவரைக் குறித்து இப்படியாக ஒரு கதை சொல்லப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட மருத்துவர் இரவு வேளையின் பிற்பகுதியில் மரிக்கும் நிலைமையில் உள்ள ஒரு பாலகனை பார்க்கும்படி அழைக்கப்பட்டார். அதே வேளையில் ஒரு குருவானவருக்கும் செய்தி அனுப்பினார்கள். மருத்துவர் குருவானவர் வந்து சேருவதற்கு ஒரு வினாடிக்கு முன்பதாக வந்தார். மருத்துவரால் இனி ஒன்றும் செய்ய முடியாது என்பது தெளிவானபோது அவர் ஒரு பக்கமாய் ஒதுங்கி நின்றார். அதே நேரத்தில் குருவானவர் வேகமாக ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து, அந்த தண்ணீரின் சில துளிகளை குழந்தையின் முகத்தில் தெளித்து, ‘‘ நான் உனக்கு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்’’ என்றார். ஒன்று அல்லது இரண்டு வினாடிகள் கழித்து அந்தக் குழந்தை மரித்தது. மருத்துவரும் குருவானவரும், இருவருமாக வீட்டை விட்டு வெளியேறின போது, மருத்துவர் குருவானவரிடம், ‘‘நீங்கள் சரியான வேளைக்கு வந்து விட்டீர்கள்; இரண்டு நிமிடம் கழித்து வந்திருந்தால் அதிக தாமதாமாயிருக்கும். நீங்கள் எப்படிப்பட்ட பாதரட்சைகளை அணிகிறீர்கள் என்று நான் தெரிந்து கொள்ளலாமா’’ என்று கேட்டார். குருவானவர் ‘‘கயிறு இல்லாத பாதரட்சை (Congress gaiters)’’ என்று பதில் சொன்னார். ‘‘கயிறு (lace) வைத்து கட்டுகிற பாதரட்சை அணிந்திருப்பீர்கள் என்றால் நேரத்திற்கு வந்து சேர்ந்திருக்க மாட்டீர்கள், அப்படியென்றால் அந்த குழந்தைக்கு அது எவ்வளவு பெரிய பாதகத்தை உண்டு பண்ணியிருக்கும்’’ என்றார் மருத்துவர்.

விஷயம் தெரிந்த கிறிஸ்துவ மக்களில் அனேகர், ஞானஸ்நானம் பெறாத ஒரு குழந்தையை தேவன் நித்திய காலமாக உபத்திரவப் படுத்தும்படியாக பிசாசினிடத்தில் ஒப்புக்கொடுப்பார் அல்லது அதற்கு குந்தகம் விளைவிக்கும்படியாக ஏதேனும் செய்வார் என்ற இப்படியான,





பொய்யான, அறியாமையால் வரும் யோசனையை மறுப்பது உண்மைதான். ஆனாலும் இப்படியான சடங்காச்சாரம் இல்லாமல் அவர்கள் குழந்தைகளின் ஒன்று எவ்விதத்திலாவது மரிக்க நேர்ந்தால், இதே ஜனங்களில் அனேகர் அதிகமான சிரத்தையைக் காட்டுகிறார்கள். மேலும் இன்னும் அதிகமாக கல்வி அறிவு இல்லாதவர்களில் அனேகர், இந்த சடங்காச்சாரங்களில் அதிக நம்பிக்கை உடையவர்களாகவும், அது செய்யப்படாவிட்டால், அதனால் விளைவுகள் உண்டாகுமோ என்கிற சித்திரவதை பயத்துடன் இருக்கிறார்கள். இந்த தவறான நம்பிக்கைகள், ‘‘இருண்ட யுகங்கள்’’ என்ற காலத்தின் நூற்றாண்டிலிருந்து இருந்து வந்திருக்கின்றது.

இந்த தவறான கருத்துக்கள், ஞானஸ்நானத்தின் முக்கியத்துவம், அதனால் வரும் விளைவுகள் போன்றவை இரண்டாவது நூற்றாண்டி லிருந்தே வளரத் தொடங்கிவிட்டன என்பதற்கான ஆதாரத்தை ‘‘Hagenbach’’ என்பவரின் ‘‘ History of Doctrines’’ என்ற புத்தகத்தில் 72 ம் பக்கத்தில் காணலாம். இதற்குப் பின்னர், கான்ஸ்டன்டைன் காலத்தில் தெற்றுல்லியன் (Tertullian) என்பவரின் ஆதரவில், ஞானஸ்நானத்தில், பின் செய்யும் பாவங்களைத் தவிர, முன்பு செய்த பாவங்களிலிருந்து சுத்திகரிக்க ஒரு மந்திர சக்தி உள்ளது என்று கருத்து வந்தது; மேலும் இப்படிப்பட்ட ஒரு கருத்தினால் ஞானஸ்நானம் கூடுமானவரை மரண நேரம்வரை ஒத்திவைக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் பரவியது. இதற்கும் பின்னர், ‘‘கடைசியான அபிஷேகம்’’ மரணத்தின் வாசலில் நிற்பவர்களுக்கு ஆறுதலாக அமைந்தது, ஆகவே அந்த நிலையில் உள்ளவர்களை ஆலயத்திற்கு துரிதமாக எடுத்துச் செல்வதற்கான முயற்சி மேற் கொள்ளப்பட்டது. ‘‘சபைக்கு வெளியே இரட்சிப்பு இல்லை’’ என்ற கருத்தை கொண்டு வந்தவர் ‘‘பரி. அகஸ்டின்’’ தான். அதற்கு பின்னர், இதன் விளைவாக பாலகர்கள் ஆலயத்தில் அங்கத்தினர்கள் ஆக்கப்படாவிட்டால் இரட்சிப்பைப் பெற தவறிவிடுவார்கள் என்ற போதனை வந்தது. அந்த கருத்து வந்த நாளிலிருந்து பாலகர்களின் பொதுவான ஞானஸ்நானம் என்ற கருத்து வந்துவிட்டது. கிறிஸ்துவத்தின் முக்கியமான நோக்கம் ஆரம்பத்திலிருந்து அதன் செல்வாக்கையும், எண்ணிக்கையும் பெருக்கிக் கொள்ளுவதுதான். இப்படியாக நம்முடைய சிருஷ்டிகரின் குணாதிசயமும், அவருடைய செயல்படும் தன்மையும் மாசுபடுத்தப்பட்டது, அவருடைய வசனத்தின் சாட்சி வெறுமையாக்கப் பட்டது, மேலும் கோதுமை மணியான உண்மையான கிறிஸ்துவம்,

சத்துருவினால் விதைக்கப்பட்ட இந்த ''பதரினால்'' செழுமையாகி கறைபட்டுவிட்டது.

## குழந்தை ஞானஸ்நானம் சிலரால் நிராகரிக்கப்பட்டது

ஞானஸ்நானமானது விசுவாசிகள் மேல் சுமத்தப்படுகிறது என்று நினைப்பவர்கள் மத்தியிலும், ஒரு நபர் மற்றவருக்காக விசுவாசிக்க முடியாது என்று நினைப்பவர்கள் மத்தியிலும் குழந்தை ஞானஸ்நானம் என்பது வேதாகமத்தின்படியானது அல்ல என்று நிராகரிக்கப்படுகிறது. மேலும் நமது ஆண்டவரும் அப்போஸ்தலர்களும் கட்டளையிட்ட ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் முழ்குவதைத்தவிர வேறொன்றும் அல்ல என பொதுவான கருத்தை இதே ஜனங்களும் உடையவர்களாக இருக்கிறார்கள். ஞானஸ்நானத்தை குறிக்கும் கிரேக்க பதமான ''பேப்டைசோ'' ( baptizo ) என்ற வார்த்தை மூழ்கு, அல்லது மூடு, அல்லது குதித்து மூழ்கு அல்லது முழுமையாக ஈரமாக்கு என்ற அர்த்தமுடையது என்ற உண்மையையும், கிரேக்க மொழியில், தெளிக்க அல்லது ஊற்ற, அல்லது பொழிய முற்றிலும் வித்தியாசமான வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன என்ற உண்மையையும் அவர்கள் நமது கவனத்திற்கு கொண்டு வருகின்றார்கள். இந்த விசுவாசிகள், பொதுவாக தண்ணீரில் மூழ்கும் போது ஒரு முறை பின் பக்கமாக பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் மூழ்கினார்கள். ஆனாலும் சிலர் முன் பக்கமாக மூன்று முறை, ஒரு முறை பிதாவின் நாமத்திலும், ஒரு முறை குமாரனின் நாமத்திலும், ஒரு முறை பரிசுத்த ஆவியின் நாமத்திலும் மூழ்கினார்கள். இதற்கு, அவர்கள் கூறுவது என்னவெனில் கிறிஸ்து மரிக்கும் போது முன் பக்கமாக தலையைச் சாய்த்தார், ஆகவே அவரைப் பின்பற்றுபவர்களாய் அவருடைய மரணத்தின் சாயலில் முகம் முன் பக்கமாக இருக்கும்படியாக மூழ்க வேண்டும் என்று விளக்குகிறார்கள். ஆனால் கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்ட போது முகம் கீழ் நோக்கி இருக்கும்படியாக வைக்கப்படவில்லை, மேலும் பிதாவும் பரிசுத்த ஆவியும் மரிக்க வில்லை, அடக்கம் பண்ணப்படவும் இல்லை. ஆகவே இப்படியாக அர்த்தப்படுத்திக் கூறுவது முற்றிலும் ஏற்றுக் கொள்ளப்படத் தக்கது அல்ல. மேலும் பிதா,குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் என்ற வார்த்தைகளின் சரியான பொருள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின்





அதிகாரத்தின்படியாக என்று இருக்க வேண்டும்; ஏனெனில், பிதா,குமாரன், பரிசுத்த ஆவி விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படுவதை ஆமோதிக்கிறார்கள் என்பது இந்த கிறிஸ்தவ நண்பர்களுக்கு புலனாகவில்லை.

பின்புறமாக ஒரு முறை மூழ்குவதை பழக்கத்தில் வைத்திருப்பவர் களுக்குள் இரண்டு பெரிய சபை பிரிவுகள் உண்டு. அவையாவன: ''பேப்டிஸ்ட் சபை,'' ''சீஷர்கள் சபை '' என்பன ஆகும். ஆனாலும் கூட ஆராதனையை, வெகு வித்தியாசமான உணர்வுகளோடும், வித்தியாசமான உட்கருத்துடனும் நடத்துகிறார்கள். ''சீஷர்கள் சபை'' அல்லது கிறிஸ்துவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்பவர்கள் (சில வேளைகளில் அவர்களுடைய அனுமதியின்றியே ''Campbellites'' என்றும் அழைக்கப்படுகிறார்கள்), ஞானஸ்நானமானது (தண்ணீரில் மூழ்குவது) பாவமன்னிப்புக்குரியது, தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுக்காதவர்கள் இன்னும் அவர்களுடைய பாவங்களிலேயே, ''ஆக்கினையின் பிள்ளைகளாக'' இருக்கிறார்கள் என்று எண்ணுகிறார்கள். இந்த விஷயத்தை குறித்த இந்தக் கருத்து, குழந்தைகளைத் தவிர (குழந்தைகளுடைய ஆதி பாவத்தை அவர்கள் பாராமல் இருப்பது போன்று தோன்றுகிறது) மனுக்குலத்தின் அனைத்து மக்களையும் பிரித்து வைத்து விடுகிறது. Congregationalists, Methodists, Presbyterians, United Presbyterians, Lutherans, Epicopalians, Roman Cathalics, Greek Cathalics முதலான கிட்டத்தட்ட எல்லா சபைகளில் உள்ள உண்மையான கிறிஸ்துவர்களையும் கூட பிரித்து வைத்து விடுகின்றது. இப்படியாக இவர்கள் அனைவரும் பாவிகளாகவும், தேவனுக்கு முன்பாக அநீதிமான்களாகவும் குறிக்கப்படுவார்கள்; இதன் விளைவாக, இதன் அர்த்தம் எப்படிப்பட்ட விதத்தில் புரிந்து கொள்ளப்பட்டாலும் சரி, அவர்கள் ''தேவனின் கோபாக்கினைக்கு'' உட்படுத்தப்படுவார்கள். இதன்படி, ''சீஷர்கள் சபை'' உட்பட அனைவரும், நித்திய வேதனை என பொருள்படுகிறது என்று உணர்ந்து கொள்ளுவார்கள்.

உலகத்தாரைப் பொறுத்த மட்டுமல்ல, பெருந்திரளான கிறிஸ்தவர்களைப் பொறுத்த வரையிலும் கூட, இந்த ஒரு நிலையை எடுத்துக் கொள்ளுவது கடினமானது. சொல்லப்பட்ட காரியத்தின் யதார்த்தம் நம்முடைய ''சீஷர்கள் சபை'' நண்பர்களுக்கு விளங்கி யிருந்தாலும், மற்ற அனைவரும் அதை யோசித்துப் பார்க்கும்படியாக

அவர்கள் ஒரு அறிக்கை விடும்படியாக இந்த கேள்வியை வலியுறுத்துவார்கள் என்றால் நாம் ஆச்சரியப்படப் போவதில்லை. இது ஞானஸ்நானத்தைப் பற்றிய ஒரு சரியான கருத்து என்று நாம் ஏற்றுக் கொள்ள முடியாது; எங்களுக்கு அது முறையானதும் அல்ல, வேதாகமத்தின்படியானதும் அல்ல. நம்முடைய இனத்தின் நித்திய நன்மை, இப்படியான ஏற்பாட்டிற்கு கீழ்ப்படிவதினாலோ, அல்லது அதை அறிந்து வைத்துக்கொள்வதைப் பொறுத்தோ இருக்கும் என்று நம்முடைய ஆண்டவர் சித்தங்கொண்டிருப்பார் என்பதை நாம் நம்பமுடியாது. இருந்த போதிலும், நம்முடைய ''சீஷர்கள் சபை'' நண்பர்கள் சில வேத பகுதிகளினிமித்தம் தங்களை பலமான நிலையில் வைத்துள்ளார்கள் என்பதையும் மறுத்து விடக்கூடாது. அந்த வேதப்பகுதிகளாவன: யோவான் யூதர்களுக்கு மனம் திரும்புதலைக் குறித்தும், பாவ மன்னிப்பைக் குறித்தும் பிரசங்கிப்பது; மனந்திரும்பி பாவமன்னிப்புக் கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் என்று அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தெ நாளன்று யூதர்களுக்குப் பிரசங்கித்தது என்பவனவாகும். (மத். 3:6 ; யோவா. 4:1,2 ; அப். 2: 38,41) இந்த வேதப் பகுதிகள் ஏன், எப்படி யூதர்களுக்கு மாத்திரமே உரியவைகளாக இருந்தது, ஒரு போதும் புறஜாதியினருக்கு உரியதாக இல்லை என்பதை நாம் ஏற்ற வேளையில் காணலாம். மேலும் எபேசு சபையில் உள்ள சில புறஜாதியினர், பாவ மன்னிப்புக்கென்றும், மனந்திரும்புதலுக்கென்றும் யோவான் கொடுத்த ஞானஸ்நானத்தைப் பெற்றோம் என்று அறிக்கையிட்ட போது, அப்போஸ்தலனாகிய பவுல் ஆண்டவராகிய இயேசுவின் நாமத்திலே அவர்களை ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்படியான கட்டளையைப் பிறப்பித்தைக் குறித்தும் ஏற்ற வேளையில் காண்போம். (அப். 19: 3–5)

நம்முடைய ''பேப்டிஸ்ட் சபை'' நண்பர்கள் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெறுவதுதான் ஒரே ஞானஸ்நானம் என்று வலியுறுத்துவதில் அதிக முயற்சி எடுத்தாலும், அது செய்யக்கூடிய காரியத்தைக் குறித்து முற்றுலும் வித்தியாசமான அறிக்கையை வெளியிட்டார்கள். அது பாவ மன்னிப்புக்குரியது என்பதை மறுத்து, மீட்பரான ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைப்பதினால் மாத்திரமே பெற்றுக் கொள்ளக் கூடும் என்கிறார்கள். இருந்தாலும், ஆலயத்தில் நுழைவதற்கான வாசலாக ஞானஸ்நானம் உள்ளது என்றும், மூழ்கினவர்கள் தான் உண்மையிலேயே ஆலயத்திற்குள்





நுழைகிறார்கள் என்றும், ஆலயத்திற்கே உரித்ததான சிலாக்கியங்களையும், ஆசீர்வாதங்களையும் இப்பொழுது மாத்திரமல்ல, வருகிற வாழ்க்கையிலும் பெற்றுக் கொள்ளும்படியாக மற்றவர்கள் எதிர் பார்க்க கூடாது என்றும் சொல்லுகிறார்கள். பொதுவாக, ''பேப்டிஸ்ட் சபை'' இராப்போஜன பந்திக்கு தண்ணீரில் மூழ்காத எவரையும் வரவேற்க மறுக்கிறார்கள். அவர்கள் கூறும் போது, இராப்போஜன பந்தியானது உலகத்தாருக்கானதல்ல, ஆலயத்தில் உள்ளவர்களுக்கு மாத்திரமே; மேலும் தண்ணீர் ஞானஸ்நானம் என்ற வாசல் வழியாகப் பிரவேசித்தவர்கள் மாத்திரமே ஆலயத்தில் இருக்கிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். சமீப வருடங்களில், இந்த விதிமுறையை தளர்த்தியுள்ள சில பேப்டிஸ்ட் சபைகள், அவர்களுக்குள்ள கருத்தை மீறி செய்திருக்கிறார்கள். J.T.Lloyd என்பவர் சமீபத்தில் எழுதிய ''Religious Herald'' என்ற கட்டுரையிலிருந்து இந்த விஷயத்தைக் குறித்து எழுதப்பட்டதைக் கீழேக் கொடுக்கிறோம்:

''கிறிஸ்தவ ஞானஸ்நானம் என்பது, ஒரு விசுவாசி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால் தண்ணீர் மூழ்கி பெறுவதாகும்– மற்றவை எதுவும் ஞானஸ்நானம் இல்லை. இருக்கின்றவைகளில் பேப்டிஸ்ட் சபைகள் மட்டுமே கிறிஸ்தவ சபைகளாகும். குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பவர்களுக்கு, ஆண்டவருடைய பந்தியில் எந்த வித உரிமையும் கிடையாது. ஆண்டவருடைய பந்தியில் யாரெல்லாம் அபாத்திரமாய் போஜன பானம் பண்ணுகிறவர்களாய் இருக்கிறார்களோ அவர்கள் தங்களுக்கு ஆக்கினை தீர்ப்பு வரும்படியாக பண்ணுகிறார்கள்.''

பேப்டிஸ்ட் சபையின் கருத்து சரியானதென்றால், கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகின்றவர்கள், தண்ணீரில் மூழ்காத மற்ற அனைத்து சபைகளில் உள்ள கிறிஸ்தவர்கள், திருவசனத்தின் பிரகாரம் கிறிஸ்துவின் சபைக்கு தாங்கள் உரியவர்கள் என்று எண்ணி தங்களையே ஏமாற்றிக் கொள்கிறார்கள் என்று பொருள்படுவதாகும். ஏனெனில் நம்முடைய பேப்டிஸ்ட் நண்பர்கள் கூறுவதாவது : மூழ்குவது ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் வாசலாகும். எவரெல்லாம் மூழ்காமல் உள்ளார்களோ, அவர்கள் _ஆலயத்திற்குள் இல்லை, மாத்திரமல்ல கிறிஸ்துவின் சரீரமான கிறிஸ்துவின் சபைக்கும் உரியவர்கள் அல்ல. நம்முடைய பேப்டிஸ்ட் நண்பர்கள், அதிலும் விஷேசமாக நல்ல உயர்ந்த மனம் உள்ளவர்களும், அறிவில் முதிர்ச்சி பெற்றவர்களும், அவர்களுடைய நம்பிக்கையின் எதார்த்தமான முடிவை பொது ஜனங்கள் இடையே வலியுறுத்தி சொல்ல தயங்குவதைக் குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை. அவர்களுடைய

கருத்து எதிர்மாறாக இருந்தாலும் கூட, கிறிஸ்தவர்கள் என்று அவர்கள் மதிக்க வேண்டியவர்கள், அவர்கள் மேல் கோபத்தையும் கடுகடுப்பையும் கொண்டு வரக் கூடுமானதால் பேப்டிஸ்ட் நண்பர்களால் அப்படி செய்ய முடியாது. ஆனால் இந்த பேப்டிஸ்ட் நண்பர்களின் கருத்து உண்மையாயிருந்தால் இது எப்படிப்பட்ட பொருளுடையதாக இருக்கும்? கிறிஸ்தவத்தில் உள்ள எல்லா பல்வேறு சபை பிரிவுகளின் நம்பிக்கையின் பிரகாரம் மூழ்கினவர்கள் மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள், மிஞ்சியுள்ள எல்லா சபைப்பிரிவின் மக்களும், மற்றும் சபைப் பிரிவுகளுக்கு அப்பாற்பட்ட உலகத்தார் அனைவரும் ஆக்கினைக்கு உட்படுத்தப் படுவார்கள் என்று பொருள்படும் என்று நாங்கள் பதில் கூறுகின்றோம். எப்படியெனில், எல்லா சபை பிரிவினரின் விசுவாசமும், திருச்சபை மாத்திரம் தான் இரட்சிக்கப்படும், மற்றவர்கள் அனைவரின் எதிர்காலம் மரணத்தில் நிச்சயிக்கப்பட்டபடி, அழிவை நோக்கி, அல்லது நித்திய வேதனையை நோக்கி, அல்லது மற்ற பயங்கரமான எதிர்காலத்தை நோக்கி துரிதமாக செல்கிறார்கள் என்று இருக்கிறதில்லையா?

மேற்சொல்லப்பட்ட மாம்சீக பூரணமற்ற கருத்துக்களில் இருந்து நாம் வேறுபடுகிறோம், அவைகளில் உள்ள கருத்துக்கள் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாமல் இருப்பது வெளியரங்கமாய் இருக்கிறது. அவர்களுடைய தவறுகள் ஒவ்வொரு கற்றறிந்த, பாரபட்சமற்ற மனதிற்கும் உடனடியாக பாதிப்பை ஏற்படுத்துகிறது. சீஷர்கள் சபைப் பிரிவோ அல்லது பேப்டிஸ்ட் சபைப் பிரிவோ அல்லது இரு சபைப்பிரிவுகளும் ஜீவனுள்ள தேவ சபை என்று அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது என்றும், அவர்களுடைய சபையில் மூழ்கினவர்களின் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்றும், மற்ற சபை பிரிவுகளில் உள்ள, மூழ்காதவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன என்றும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. மேலும் மனுஷ குமாரன், சுவிசேஷம் என்னும் நல்ல விதையை நிலத்தில் விதைத்த போது, கோதுமை எல்லாம் பேப்டிஸ்ட் சபையின் வேலிக்குள் கொண்டு வரப்பட்டது என்பதையும் மற்ற களைகள் அனைத்தும் வெளியே இருந்தன என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. அது மாத்திரமல்ல, எல்லா கோதுமையும் தண்ணீரில் மூழ்கினவர்கள் மத்தியில் காணப்படும், இவைகளில் களைகளும் உள்ளடக்கமாய் இருக்கிறது என்றும், அதன்படியாக மற்ற சபைப் பிரிவுகள் ஆண்டவருடைய கோதுமையும் களைகளும் என்கின்ற உவமையிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன



என்றும் நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. (மத்.13) இந்த மாறுபாடான கருத்துக்கள் எல்லாம் தவறானவைகள் என்றும் தேவனால் ஏற்றுக் கொள்ளப்படாதவைகள் என்றும் கூறுகிறோம். எல்லா சபை பிரிவுகளும், உட்பிரிவுகளும் திவ்விய ஏற்பாட்டிற்கு முரணானவை என்று நாம் கூறுகிறோம். ஒரே தலை, ஒரே சரீரம், ஒரே விசுவாசம் என்பதுதான் திவ்விய ஏற்பாடாகும். ஆண்டவருடைய சபையாயிருக்கிற புது சிருஷ்டி அனேக அவயவங்களை கொண்டது என்று நாம் கூறவில்லை, ஆனால் அது ஒரு ''சிறு மந்தையாக'' இருக்கிறது என்று கூறுகிறோம்.

நம்முடைய பேப்டிஸ்ட் சபை நண்பர்களையும், சீஷர்கள் சபை நண்பர்களையும் நம்முடைய பிரஸ்பெடேரியன், மெதடிஸ்ட், லுத்தரன், எபிஸ்கோபல், ரோம கத்தோலிக்க நண்பர்களையும், பொதுவான கிறிஸ்துவத்திற்குள் ஒரு பகுதியாக சேர்த்துக் கொள்ள வேண்டும், இன்னொரு விதத்தில் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற ''பாபிலோன்'' என எடுத்துக் கொள்ள வேண்டும். மனுஷ குமாரனும் அவருடைய உண்மையான விசுவாசிகளும் நல்ல விதையை விதைத்தார்கள்; அது கிறிஸ்தவ உலகம் பூராவும் நல்ல கனிகளைக் கொண்டு வந்துள்ளது; அதை இந்த சுவிசேஷ யுகத்தின் கோதுமை நிலம் என்று வைத்துக் கொள்ளலாம். சத்துரு களைகளை அழிக செழிப்பாக வளரும்படி விதைத்திருப்பதால், கோதுமையானது மிகவும் அதிகமாக நெருக்கப்பட்டிருக்கிறது; மேலும் சில விஷயங்களைப் பொறுத்த வரையில் நிலமானது, சரியான விதத்தில் சொல்ல வேண்டும் என்றால் ஒரு கோதுமை நிலம் என்பதைவிட களைநிலம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் இப்பொழுது, ஆண்டவருடைய வாக்குத்தத்தத்தின்படி இந்த சுவிஷேச யுகத்தின் அறுவடை வந்திருக்கிறபடியால், அவருடைய களஞ்சியத்தில் சேர்க்கும்படியாக, அவர் அவருடைய அறுவடை ஆட்களை அனுப்புகிறார். ஆகவே, இந்த உண்மையான கோதுமை மணிகள் அனைத்தையும் பேப்டிஸ்ட், சீஷர்கள் சபைப் பிரிவுகளில் மாத்திரமே அவர் காணாமல், அவைகளை பிரஸ்பெடேரியன், மெதடிஸ்ட், லுத்தரன், எபிஸ்கோபல், ரோம கத்தோலிக்க இன்னும் மற்றவர்கள் மத்தியிலும் காண்கிறார் என்பது தெளிவாகிறது. இதற்கு இசைவாக, பாபிலோனில் உள்ள எல்லா தேவ ஜனங்களுக்கும் தூது அனுப்பட்டுள்ளது. ''மகா பாபிலோன் விழுந்தது. (திவ்விய தண்டனை பாபிலோனின் மேல் செலுத்தப்பட்டது, அவர்கள் ஆண்டவரால் நிராகரிக்கப்பட்டார்கள்)....... என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய

பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்.'' (வெளி. 18: 2,4)

இது உண்மையாயிருக்க, ஞானஸ்நானம் என்றால் என்ன, அது கொண்டு வருகின்ற சிலாக்கியங்கள், ஆசீர்வாதங்களைக் குறித்து பேப்டிஸ்ட், சீஷர்கள் சபை இன்னும் ஏனையோரும் வெகு மோசமான தவறுகளைச் செய்திருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. எல்லா விதமான மாம்சீக பாரம்பரியங்களுக்கும், கருத்துக்களுக்கும் அப்பாற்பட்டு, நாம் பயபக்தியுடனும், ஜெபத்துடனும் உண்மையிலேயே திவ்விய முறையாயிருக்கிற ஆண்டவருடைய வசனத்துக்கு, அப்போஸ்தலர்களின் மூலமாக போகும்படியாக, ஞானஸ்நானம் என்ற பொருளை பற்றிய இப்போதுள்ள எல்லா கருத்துக்களிலும் ஒரு மிகப்பெரிய தவறு இருக்கிறது என்பது எல்லோருக்கும் விளங்கும்படியாக, தற்போதய காலம் வரை உள்ள முழு சூழ்நிலையையும் சுருக்கமாக ஆராய்ந்துள்ளோம். நாம் கிறிஸ்துவ உலகில் பல்வேறு விதமான கருத்துகளில் காணப்படுகின்ற குழப்பத்தைக் மிக தெளிவாக கண்ட பின்னரே, இந்த விஷயத்தைக் குறித்ததான திவ்விய செய்தியின் எளிமையை உணர முற்றுமாக ஆயத்தமாக இருக்கிறோம்.

## ஞானஸ்நானத்தைப் பற்றிய வேதாகம சாட்சி

பாத்திரங்களைக் சுத்திகரித்தல், தீட்டானவர்கள் மேல் ஜலம் தெளிப்பது, சுத்திகரிப்பது போன்றவைகளைக் குறித்து பலவிதமான முறைகள் யூத சடங்காச்சாரங்களில் இருக்கின்றன, ஆனால் யூத யுகத்தின் இறுதியில் யோவான் பிரசங்கித்த ஞானஸ்நானத்தைக் குறித்து ஒன்றும் கிடையாது. யோவானுடைய ஞானஸ்நானம் யூதர்களுக்கு மாத்திரமே உரியது, அவர்கள் ஏற்கனவே பாவநிவாராண நாளன்று செலுத்தப்பட்ட காணிக்கைகளால் சுத்திகரிக்கப்பட்டதற்கு மாதிரியாக இருந்ததாக எண்ணப்பட்டிருந்தனர். இவர்களுக்கு யோவானுடைய ஞானஸ்நானம் ஏற்கனவே அறிந்து கொள்ளப்பட்டிருந்த பாவத்திலிருந்து மனம் திரும்புதலைக் குறித்தது, அதோடு கூட நியாயப்பிரமாண உடன்படிக்கையை மீறுதல், அவைகளில் இருந்து சுத்திகரிக்கப்பட்டதற்கு மாதிரியாகவும் இருந்ததை குறித்தது; மேலும் இருதயத்தில் அல்லது எண்ணத்தில் நீதிமானாக்கப்பட்ட ஒரு நிலைக்கு திரும்புவதையும்





குறித்தது. இவ்வண்ணமாக பாவத்திலிருந்து மனம் திரும்பிய யூதர்கள், அடையாளமாக சுத்திகரிக்கப்பட்டவர்கள் அல்லது கழுவப்பட்டவர்கள், இதற்கு முன்பாக அவர்களுடைய நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழாக அவர்கள் இருந்த நிலைக்கு பழையபடி தேவனோடு ஒப்புரவான நிலைக்கு கொண்டு வரப்பட்டதாக எண்ணப்பட்டார்கள். யோவானின் பிரசங்கம், அவன் கொடுத்த ஞானஸ்நானத்தின் நோக்கமானது தேவனுடைய இராஜ்யத்திற்கென ஜனங்களை ஆயத்தப்படுத்துவதற்கும், மேசியாவை வெளிப்படுத்துவதற்கும் ஆக இருந்தது. யோவானுடைய பிரசங்கம், மேசியாவின் வருகை மிக சமீபம் என்றும், ஜனங்கள் சரியான ஒரு ஆசீர்வாதத்தைப் பெறவேண்டுமென்றால் ஜனங்களுடைய இருதய நிலையானது ஆயத்த நிலையில் இருக்க வேண்டும் என்றும் பொருள் கொண்டிருந்தது. நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு கீழாக இருந்த ஒவ்வொரு யூதனும், மோசேயின் வீட்டின் ஒரு அங்கத்தினனாக எண்ணப்பட்டான்.'' எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும், ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்.'' ( 1 கொரி. 10:2) ''மோசே பணிவிடைக்காரனாய், அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான்'' (எபி 3:5) என்று எழுதியிருக்கிறபடி மோசேயினுடைய வீடு பணிவிடை செய்பவர்களின் வீடாய் இருந்தது. திவ்விய ஒழுங்கின்படியாக நிழலான இஸ்ரேல் அல்லது மோசேக்குக் கீழாக பணிவிடைக்காரரின் வீட்டில் ஒரு அங்கத்தினராக யாரெல்லாம் உண்மையுள்ளவர்களாய் இருந்தார்களோ, நிழலான நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராக இருந்த மோசேக்கு கீழாகவும், நியாயப்பிரமாண உடன்படிக்கைக்கு உண்மையாகவும் யாரெல்லாம் இருந்தார்களோ, அவர்கள் எல்லாரும் நிஜமான மோசேயை, மேசியாவான கிறிஸ்து வெளிப்பட்ட போது, வரவேற்கும்படி இப்படிப்பட்ட ஆயத்த நிலையில் உள்ள இருதயத்தை உடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் மோசேக்குள்ளாக மேகத்தினாலும், சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பெற்றது, நிழலான மோசேக்குப் பதிலாக கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுவது, அவர்கள் அவருடைய சரீரத்தின் அங்கங்களாக கிறிஸ்துவுக்குள் இருப்பார்கள், அவர் அவர்களுடைய தலையாய் இருப்பார், அவரோடு கொண்ட உறவின் மூலமாய் புது உடன்படிக்கையின் ஊழியக்காரர்களாய் இருப்பார்கள், இந்த புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக முழுமையாக மகிமையடைந்த கிறிஸ்து– தலையும், சரீரமும் சேர்ந்த கிறிஸ்து– மத்தியஸ்தராய் இருப்பார் என்பதைக் குறிக்கிறது.

ஆகவே, யோவான் தன்னுடைய விசுவாசிகளுக்கு கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை, மோசே போன்றவர்களோடு ஒருமனப்படுகிற ஒரு நிலைக்கு மறுபடியும் கொண்டுவரும்படியாக மனந்திரும்புதலுக்கான ஞானஸ்நானத்தை மாத்திரம் கொடுத்தார். இப்படிப்பட்ட நிலையில் ஒலிவ மரத்தின் கிளைகளாக (ரோம. 11:16-21) அவர்கள் கிறிஸ்துவுக்குள் ஒட்டப்பட தேவையிருக்காது, ஏனெனில் அவர்களுக்கு கிறிஸ்து மேசேயின் இடத்தை எடுத்துக் கொள்ளுவார், மோசே அந்த வேளையில் கிறிஸ்துவுக்கு அடையாளமாக இருந்தார். இப்படியாக,இது ''யோவானின் ஞானஸ்நானம்'' என்றும், மனந்திரும்பு தலுக்கும், பாவ மன்னிப்புக்கும், பாவங்கள் கழுவப்படுவதற்கும் என்றும் அழைக்கப்பட்டது. இது யூதர்களைத் தவிர வேறு எவருக்கும் உரியது அல்ல. ஏனெனில் புறஜாதியார் மோசேக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படவில்லை; எந்த விதத்திலும் நிழலாயிருந்த பணிவிடைக் காரர்களின் வீட்டில் இருந்த தில்லை; ஆகவே, பாவத்திலிருந்து மனந்திரும்புதலின் மூலம் இதற்கு முன்பு அவர்கள் இருந்திராத ஒரு நிலைக்கு திரும்பி வர இயலாது. அப்போஸ்தலர் விவரிக்கிற மாதிரி, அவர்கள் காட்டொலிவமர கிளைகளாக, ''கோபாக்கினையின் பிள்ளைகளாக,'' இஸ்ரயேலின் காணியாட்சிக்கு புறம்பானவர்களாக, அந்நியரும், பரதேசிகளும், தேவனற்றவர்களுமாக இருந்தார்கள். எந்த அளவிலான மனந்திரும்புதலும், சீர் பொருந்துதலும் அந்நியரும் பரதேசியுமாய் இருக்கிற இவர்களை அடையாளமாய் இருக்கிற பணிவிடைக்காரரின் வீட்டில் அங்கத்தினர்களாக்காது. பணிவிடைக் காரரின் வீட்டின் அங்கத்தினராயிருப்பவர்களுக்கு மாத்திரமே நிஜமான புத்திரரின் வீட்டிற்கு கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தின் ஊடாக கடந்து செல்லும் சிலாக்கியம் உண்டு. மற்றவர்கள் ஒலிவமரத்தின் (கிறிஸ்து) கிளைகளாக மாறுபவர்கள், வேர் ஆபிரகாமின் வாக்குத்தத்தம். அவர்கள் பணிவிடைக்காரரின் வீடான சுய ஒலிவ மரத்திற்குள், சுபாவ கிளைகள் முறிக்கப்படுவதினால் ஏற்பட்ட காலியிடத்தில் ஒட்டப்படுவதாய் இருக்கிறார்கள். சுபாவ கிளைகள் முறிக்கப்படுவற்கான காரணம், அவர்களுடைய இருதயங்கள் மேசியாவை ஏற்றுக் கொள்ளக் கூடிய சரியான நிலையில் இல்லாதிருந்ததே, ஆகவே அவர்கள் அவருடைய குமாரரின் வீட்டின் அங்கத்தினர்களாக ஏற்றுக் கொள்ளப்பட முடியாது. ''அவர் தமக்குச் சொந்தமானதிலே (இஸ்ரேல் ஜனங்கள்) வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ (ஜனங்களோ) அவரை ஏற்றுக்





கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவார்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும் படி அவர்களுக்கு அதிகாரம் (சிலாக்கியம்) கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினலாவது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல் தேவனாலே பிறந்தவர்கள்.'' இவர்கள் இப்படியாக ஆவிக்குரிய பிரகாரம் புது சிருஷ்டியின் அங்கத்தினர்களாக ஆனார்கள்.

நிழலான இஸ்ரேல் எகிப்தை உதறித்தள்ளினது (எகிப்து உலகத்திற்கு நிழல்) மோசேயினால் வழி நடத்தப்படுவதற்காக. சிவந்த சமுத்திரத்திற்கு அவர்கள் வந்த போது, அது அவர்களுக்குண்டான பெரிய சோதனை அல்லது பரீட்சையாக இருந்த வேளையில், மோசேயின் மூலமாக தேவன் குறுக்கிட்டு இருக்காவிட்டால் அது அவர்களுக்கு அழிவை உண்டாக்கியிருக்கும்; அவ்வேளையில், மோசேக்குள் சமுத்திரத்தினாலும் மேகத்தினாலும், அவர்கள் எல்லாரும் அடையாளமாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். இரண்டு பக்கத்திலும் சமுத்திரமும், மேகம் அவர்களுக்கு மேலாகவும் இருந்தது, அது அவர்கள் அவனுடைய வீடாக அல்லது குடும்பமாக, அவர்களுடைய தலையாக அவன் இருக்கத் தக்கதாய் ஆனது. அவர்கள் சமுத்திரத்தை விட்டு, அவனுக்கு பயபக்தி உள்ளவர்களாய், அவனை பின்பற்றவும், கீழ்ப்படியவும் உறுதி செய்து வெளியே வந்தார்கள். சீனாய் மலையில் நியாயப்பிரமாணத்தின் உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராய் அவனை இன்னும் உறுதியாய் ஏற்றுக் கொண்டார்கள். ''உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப் பண்ணுவார். அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்கு செவி கொடுப்பீர்களாக'' என்று சொன்ன அவன் மேல் அவர்களுடைய நம்பிக்கைகள் எல்லாம் கட்டப்பட்டிருந்தன. (உபா. 18:15,18; அப். 3:22) இப்படியாக அர்ப்பணித்துக் கொண்டு, மரணம் ஏற்படினும்கூட மோசேயோடு இருக்க தீர்மானித்துக் கொண்ட ஒவ்வொரு இஸ்ரயேலனுக்கும், அவர்களுடைய நம்பிக்கைகள் எல்லாம் அவன் மேல் நங்கூரமிடப்பட்டிருக்கும் போது, அவனுக்காக, அவன் யாருக்கு நிழலாயிருந்தானோ அந்த கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வது அவர்களுக்கு ஒரு சிறிய மாற்றமாகும்; நியாயப்பிரமாணத்தின்படி மோசேக்கு அவர்கள் கொடுத்த உறுதி மொழிகள், இப்பொழுது அவர்கள் சேவிக்க வேண்டும் என்று இருக்கிற புது உடன்படிக்கைக்கு உத்திரவாதியாக இருக்கிற

கிறிஸ்துவுக்கு, திவ்விய ஒழுங்கின்படி மாற்றப்படுகின்றது என்பதை புரிந்து கொள்ளுவதும் ஒரு சிறிய மாற்றமாகும். *(2 கொரி. 3:6)*

புறஜாதியாரோடு இந்த விஷயம் முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. அவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுவது, யூதர்கள் மோசேயோடு உடன்படிக்கை செய்யப்பட்டதையும், அதன்பின் கிறிஸ்துவுக்கு மாற்றப்பட்டதையும் சரியான முறையில் அடையாளப் படுத்துகிறது. ஆகவே, யூதரல்லாதவர்களும், நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிராதவர்களும், மோசேக்கு கீழாக இல்லாதவர்களும், அதனால் மோசேயிலிருந்து கிறிஸ்துவுக்கு மாற்றப்படாதவர்களுமாகிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் உரியது என வேதாகமம் அதன் அர்த்தத்தை மிக விஸ்தாரமாகவும், ஆழமாகவும் போதிப்பது நம்மை ஆச்சரியப்படுத்தாது. நல்ல ஒலிவமரத்தில் காட்டொலிவ மரத்தின் கிளைகள் ஒட்டப்படுவது பற்றி பவுல் கூறியிருப்பது போல, ஞானஸ்நானம் என்பது மிக முக்கியமான மாற்றத்தைக் குறிக்கிறது என்பதை அவர்கள் அறிந்து கொண்டார்கள் (ரோம. 11 அதி.) அது ஒரு முழு மனமாற்றத்தை குறித்தது.

## கிறிஸ்துவினுடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம்

*''கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?*

*''மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தி னாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கப் பண்ணப்பட்டோம்.*

*''ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப் பட்டவர்களானதால் அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப் பட்டிருப்போம்.'' (ரோம. 6:3–5)*

அப்போஸ்தலனாகிய பவுல், ரோமாபுரியிலுள்ள விசுவாசிகளில் அநேகருக்கு அவர்களில் எல்லோரும் என்று சொல்ல முடியாவிட்டாலும், அவர்களுக்குள் ''கோபாக்கினையின் பிள்ளைகளாக'' இருந்த புறஜாதி யினருக்கு மிகவும் தெளிவாக உண்மையான ஞானஸ்நானத்தைக் குறித்து





எழுதுகின்ற காரியத்தை சுபாவத்தின்படி புறஜாதியினராகிய நாம் ஏற்றுக் கொள்ளுவதைத் தவிர, மேலானதைச் செய்ய முடியாது.

இந்த இடத்தில் மூன்று வசனங்களின்மூலம் அப்போஸ்தலர், நமக்கு பொருந்துகிற பிரகாரம் ஞானஸ்நானம் என்ற பொருளைக் குறித்து மிகவும் விரிவாக சொல்லுகிறார். இந்த வசனங்கள் பொதுவாக ஞானஸ்நானத்தைக் குறித்து எல்லாவிதமான போதனைகளையும் நிரூபிப்பதற்காக உபயோகப்படுத்தப்படுகின்றன, ஆனால் விசேஷமாக நம்முடைய சகோதரர்களினால் ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் முழ்குவது என்பதை குறிக்கிறது என்பதை உணர்ந்து கொண்டபடியினால் இந்த வசனங்கள் எடுத்துக் கூறப்படுகின்றன. இருந்தாலும், தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறித்து அப்போஸ்தலர் ஒரு வார்த்தைக் கூறவில்லை என்பதை தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். தண்ணீர் ஞானஸ்நானம் என்பது ஒரு அடையாளமே, அல்லது உண்மையான ஞானஸ்நானத்தின் ஒரு வரைபடமாக இருக்கிறது; அப்போஸ்தலர் இந்த வசனங்களின் மூலம், வெவ்வேறு நிலைமைகளிலிருந்து, உண்மையான, அத்தியாவசியமான ஞானஸ்நானத்தை விளக்கிக் கூறுகிறார்; இது இல்லாமல் ஒருவரும் கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கத்தினராக எண்ணப்பட முடியாது என்றும், இந்த ஞானஸ்நானத்தைப் பெறுபவர்கள் எல்லாம், எந்தப் பெயராய், இடமாய், எந்த நிறத்தை, எந்த பால் இனத்தைச் சேர்ந்தவராய் இருந்தாலும் பரவாயில்லை, அவர்கள் சபையின் அங்கத்தினர்களாக, புது சிருஷ்டியின் அங்கத்தினர்களாக எண்ணப்படுவார்கள் என்று கூறுகிறார்.

ஏற்கனவே கிறிஸ்துவின் அங்கங்களாக இருப்பவர்களிடத்தில் அப்போஸ்தலர் கூறுகிறதாவது: ''நாமனைவரும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக் கிறீர்களா?'' இங்கே நாம் கொஞ்சம் கவனிக்க வேண்டும்; நாமனைவரும் தண்ணீர் தெளிக்கப்பட்டோம் என்றோ அல்லது நாமனைவரும் தண்ணீரில் மூழ்கினோம் என்றோ சொல்லவில்லை, ஆனால், ''நாமனைவரும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் ( மூழ்கினோம்) பெற்றோம்'' என்று கூறுகிறார். இயேசு கிறிஸ்துவுக்குள் மூழ்குவது என்றால் என்ன? நிச்சயமாகவே 1 கொரி. 12:27ல் அவர் விளக்கிச் சொல்லுகின்ற அதே சிந்தனையை சொல்லுகின்றார். ''நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்.'' நாம் எப்படி கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக செல்லுகிறோம்? அப்போஸ்தலர் நாம் அதற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுள்ளோம் என்று பதில் சொல்லுகிறார்; ஆகவே,

நம்முடைய ஆண்டவரின் அவயவங்களாக எண்ணப்படுகிறோம், அவர் நம்முடைய தலையாயிருக்க அவருக்கு கீழாக அங்கங்களாக இருக்கிறோம், ''அவருடைய சரீரமான சபையில்'' அங்கங்களாக இருக்கிறோம் என்கிறார்.

ஆனால், குறிப்பாக எந்த வழிமுறைப்படி நாம் கிறிஸ்து இயேசுவின் அங்கங்களாக ஆனோம் என்று ஆராய்வோம். அப்போஸ்தலர் தன்னுடைய அடுத்த அறிக்கையில் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுகிறார்: ''கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம்.'' தண்ணீருக்குள் ஞானஸ்நானம் பெற்றதினால் அவருக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம் என்று ஒரு வார்த்தையும் இல்லை. இல்லை, இல்லை! நாம் தண்ணீருக்குள் ஆயிரம் முறை ஞானஸ்நானம் பெற்றாலும், அது நம்மை கிறிஸ்துவின் சரீரத்திற்குள்ளாக அங்கங்கங்களாக ஆக்க முடியாது எவ்வளவு தெளிவாகிறது! ஆனால் அப்போஸ்தலருடைய அறிக்கையை ஏற்றுக்கொண்டு, நாம் கிறிஸ்துவோடே கொண்டுள்ள ஐக்கியம், அவருடைய சபையில் அங்கத்துவம், அப்படிப்பட்ட அங்கங்களின் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருத்தல் ஆகியவை நாம் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற காலத்திலிருந்து உள்ளது என்பதை அறிந்து கொள்ளுகிறோம். ஆனால், நாம் எப்பொழுது எவ்விதமாக அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம்? ஆண்டவரின் மரணத்திற்குள்ளாக இந்த ஞானஸ்நானம், நம்மை அடக்கி ஆட்கொள்கிற அனுபவம் வரும்போது, அல்லது நம்மை, அல்லது மாம்சத்தை அடக்கம் செய்யும்போது, புது சிருஷ்டிகளாக அவருடைய சரீரத்தின் அங்கங்கங்களாக சேர்க்கப்படும் போது ஏற்பட்டது என்று நாம் சொல்லுகிறோம். இப்படியாக நமக்குரிய எல்லாவற்றையும் அவருடைய சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து, அவரை மரணபரியந்தம் பின்பற்றவும், அவருக்கு கீழ்ப்படியவும் தீர்மானித்த அந்த தருணத்தில்தான் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றோம்.

சித்தம் என்பது ஒரு முழு நபரையும், அவருக்குள்ள உடமைகள் எல்லாவற்றையும் குறிக்கிறது. சித்தம், சரீரத்தையும், கைகளையும், கால்களையும், கண்களையும், வாயையும், மூளையையும் கட்டுப்படுத்து கிறது; அது மாத்திரமல்ல, சட்டை பைகளையும், வங்கி கணக்குகளையும், சொத்து உடைமைகளையும் கூட கட்டுப்படுத்துகிறது; அது நம்முடைய





நேரம், தாலந்து, அந்தஸ்து ஆகியவைகளையும் கூட தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது. நம்மிடத்தில் விலை மதிப்புள்ள எந்த ஒரு பொருளும், நம்முடைய சித்தத்தின் சரியான கட்டுப்பாட்டுக்குள் வராமல் இருந்ததில்லை. ஆகவே, நம்முடைய சித்தங்களை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கும்போது, அல்லது சில சமயங்களில் வேதாகம் எடுத்துக் காட்டுவது போன்று அது நம்முடைய ''இருதயங்களாக'' இருக்கிறது; அவைகளை நாம் ஒப்புக்கொடுக்கும் போது, நமக்குரிய எல்லாவற்றையும் அவருக்குக் கொடுக்கின்றோம். இப்படியாக நம்முடைய மாம்சீக சித்தத்தை கிறிஸ்துவின் சித்தத்திற்குள்ளாக அடக்கம் செய்வதுதான், நம்முடைய மாம்சீக மரணத்தைக் குறிக்கிறது. ''நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.'' (கொலோ. 3:3.) இந்த மரணம்தான், இந்த அடக்கம்தான், அவருடைய மரணத்திற்குள்ளான நம்முடைய ஞானஸ்நானமாகும். இதற்குப் பின்பு திவ்விய நோக்கத்தின்படி, நம்மை நாம் மனுஷீகம் உள்ளவர்கள் என்றோ, பூமிக்குரியவர்கள் என்றோ, பூமிக்குரிய எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள் உள்ள மனுக்குலத்தினர் என்றோ எண்ணாமல் கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டிகள் என்று எண்ண வேண்டும்.

கிறிஸ்துவின் சித்தத்திற்குள்ளாக நம்முடைய சித்தங்கள் இப்படியாக அடக்கமாகும் அல்லது மூழ்கும் அந்த தருணத்திலேயே நாம் ஒரு புது சுபாவத்திற்குள்ளாக வருவதோடு, ஒரு புது வாழ்க்கையையும் பெற்றுக் கொள்ளுகிறோம். பிதாவின் சித்தத்தை செய்யும் படியாக, நம்முடைய ஆண்டவர் தன்னுடைய மனுஷீக சுபாவத்தை மரணத்திற்குள்ளாக அர்ப்பணித்துக் கொண்டார்; இருந்தாலும், அவர் மரணத்திலேயே விடப்படாமல், ஒரு புதிய சுபாவத்திற்குள்ளாக, மரணத்திலிருந்து எழுப்பப்பட்டார். ஆகவே நாமும் இப்படியான அர்ப்பணிப்பில் அவரோடு மரிக்கிறோம், அவருடைய அர்ப்பணிப்பில் பங்கு பெறும்போது, ஒரு மரண நிலையில் விடப்படாமல், விசுவாசத்தினால் ஆண்டவரோடு நாம் கொண்டுள்ள உறவை உணர்ந்து உடனடியாகவே புது சிருஷ்டிகளாக எழும்பலாம். இப்படியாக அப்போஸ்தலர் கூறுகிறார்: ''தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள்.'' (ரோம. 8:9) உலகத்தாருக்கு இது ஒரு ''மறைக்கப்பட்ட இரகசியம்.'' பிதாவின் பார்வையில், நாம் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டிருப்பதை அவர்கள் புரிந்து

கொள்ளுவதில்லை, ஆனால் இன்னும் தங்கள் பாவத்திலேயே இருக்கிற மற்ற மனிதர்களைப் போல் நாமும் இருக்கிறோம் என்று நினைக்கிறார்கள்; அதே போன்று, நாம் புது சிருஷ்டிகளாக அவரோடு ஒரு பங்கை பெறுவதற்காக, நம்முடைய சித்தத்தை பலியிடவோ அல்லது அர்ப்பணம் செய்யவோ, அதன் மூலம் நம்முடைய மாம்சீகம் மரிப்பதற்கும் காரணம் என்ன இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்துகொள்வதோ இல்லை. அதோடு கூட, அவர்கள் நம்முடைய அர்ப்பணிப்பையும், அது ஏற்றுக்கொள்ளப் படுவதையும் காண்பதில்லை; இல்லையென்றால், புதிய ஜீவன், புதிய நம்பிக்கைகள், புதிய எதிர்பார்ப்புகள், கிறிஸ்துவின மூலமாக தேவனோடு புதிய உறவு ஆகிய இவைகளுக்கு அடையாளமாக மறுபடியும் பாவனையாக உயிர்த்தெழுப்பப்படுவதையும் அவர்கள் புரிந்து கொள்வதில்லை. அவர்கள் நம்முடைய வாழ்க்கையில் சில கனிகளைப் பார்க்கக் கூடும், ஆனால் இப்பொழுது உள்ள சூழ்நிலையின்படி, அந்தக் கனிகள் நல்லதாக அல்லது ஞானமுள்ளதாக, அல்லது லாபமுள்ளதாக அவர்களுக்கு தோன்றும் என்று நாம் நம்ப முடியாது என்று உண்மையிலேயே நாம் நம்புகிறோம். *''உலகம் அவரை அறியாதபடி யினாலே நம்மையும் (புது சிருஷ்டிகளாக) அறியவில்லை.'' (1 யோவா. 3:1)*

இவைகள் எல்லாவற்றிலும் விசுவாசிகள் செய்வதெல்லாம், இயேசுவின் பாதபடியை பின்பற்றுவதாகும் – தங்கள் சிலுவையை எடுத்துக் கொண்டு இயேசுவின் பாதபடியை பின்பற்றுவதாகும். அவர் பரிசுத்தமுள்ளவராய், குற்றமற்றவராய் கறைதிரையற்றவராய், பாவிகளிடமிருந்து விலகினவராய் இருந்தபடியால் பாவங்களுக்காக எந்த பலியும் செலுத்தப்படுவதற்காக காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது, எனெனில் அவர் பாவம் அறியாதவராக இருந்தார். ஆனால் நியாயப்பிரமாணத்தின்படி (30 வருடம்) முழு மனுஷ பருவத்தை அடைந்த உடனேயே, பிதாவின் சித்தத்தை மாத்திரம் செய்யும்படியாக, தன்னிலே ஒரு முழு அர்ப்பணிப்பை செய்யும்படிக்கு துரிதமாக செயல் பட்டார்; அதாவது தன்னுடைய உலகப்பிரகாரமான விருப்பங்கள், எதிர்பார்ப்புகள், நோக்கங்கள், வாஞ்சைகள் எல்லாவற்றையும் முழுவதுமாக பலியாக ஈந்தார். அவர் யோர்தான் நதியண்டை யோவானிடத்தில் வந்த போது, அவருடைய இருதயத்தின் சிந்தனை தீர்க்கதரிசனமாக இப்படியாக முன் உரைக்கப்பட்டது: *''அப்பொழுது நான், இதோ, வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து*





*எழுதியிருக்கிறது; என் தேவனே, உமக்குப் பிரியமானதை செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்.'' (சங். 40:7,8 ; எபி. 10:7)* இப்படியாக, நம்முடைய ஆண்டவர், பிதாவின் சித்தத்திற்கு தன்னை அர்ப்பணித்து, மரணபரியந்தம் பிதாவின் சித்தத்திற்குள்ளாக, தன்னுடைய உலகப் பிரகாரமான வாழ்க்கையும் சுபாவமும், ஏற்கனவே மூழ்கிவிட்டது அல்லது அடக்கம் செய்யப்பட்டுவிட்டது என்பதற்கு அவருடைய வெளிப்படையான ஞானஸ்நானம் அடையாளமாக இருக்கிறது என்பதை உணந்தார். அவரது நீரில் மூழ்குதல், அல்லது ஏற்கனவே அவருடைய சித்தத்தை அடக்கம் செய்தலாகிய ஞானஸ்நானம் ஒரு வகையிலான அடையாளமாக இருந்தது. இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது, அவருடைய ஞானஸ்நானம், யோவானுக்கு அல்ல, ஆனால் அவருக்கு மிகுந்த அர்த்தம் உள்ளதாக இருந்தது. யோவான், ''பாவம் அறியாதவர்'' ஞானஸ்நானம் பெறுவதைக் குறித்து மிகவும் வியப்படைந்தார்; யோவான் கொடுத்த ஞானஸ்நானம் பாவத்திலிருந்து மனம் திரும்புவதற்காக, நியாயப்பிரமாண உடன் படிக்கையை மீறுவர்களுக்காக மாத்திரமே கொடுக்கப்பட்டது.

வேறு எவரும் அன்றி, எல்லா நீதியையும் நிறைவேற்றுவது தமக்கு தகுதியாயிருக்கிறது என்பதை நம்முடைய ஆண்டவர் முற்றிலுமாக புரிந்து கொண்டார். வேறு யாருமில்லை, நம்முடைய ஆண்டவர்தாமே, அவர் ஒரு பாவியாயில்லாதிருந்தும் இப்படிப்பட்ட ஒரு முழுகுதல் (பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்படுவதற்கு அடையாளமாய்) அவருக்கு தேவையில்லை என்று அவர் அறிந்திருந்தபோதும், வர இருக்கின்ற சரீரத்தின் தலையாக இருந்தபடியால் அவரைப் பின்பற்றுகிற அனைவருக்கும்– மாம்சீக இஸ்ரேலிலிருந்து ''சரீரமான'' சபையின் அங்கங்களாக இருப்பவர்களுக்கு மாத்திரமல்ல, ஆனால் அன்னியரும் பரதேசிகளும், தேவனற்றவர்களுமான புறஜாதியாருக்கும் ஒரு சரியான, அர்த்தம் நிறைந்த பாடமாக இருக்கும்படியாக அப்படி செய்வது அவருக்கு அவசியமாக இருந்தது. அவரைப் பின்பற்றி வருகின்ற நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படியாக, அவருக்கென இருந்த எல்லாவற்றையும், அவருடைய சித்தத்தையும் மரண பரியந்தம் முழுவதுமாக அர்ப்பணம் செய்து அடையாளப்படுத்துவது அவருக்கு அவசியமாயிருந்தது.

யோவான் கொடுத்த தண்ணீர் ஞானஸ்நானம்தான் உண்மையான முழுக்கு ஞானஸ்நானம் என்ற காரணத்தினால் ஆண்டவர் பெறாமல், அதற்கு அடையாளமாக அல்லது விளக்கமாக இருக்கும்படியாக பெற்றுக் கொண்டார் என்பதை எளிதில் விளக்கிக் கூறமுடியும். இதற்கு ஆதாரமாக கடைசி இராப்போஜனத்தின்போது அவர் கூறிய அவருடைய வார்த்தையை கவனிக்க வேண்டும். ''ஆகிலும் நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானம் உண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்.'' (லூக் 12:50) இங்கே நம்முடைய ஆண்டவர் காண்பிப்பது, அவருடைய தண்ணீர் ஞானஸ்நானத்தை அல்ல, ஆனால் மனிதனின் மீட்பு கிரயமான, அல்லது பாவ நிவாரண காணிக்கையான, திவ்விய ஒழுங்கு முறைக்கு இசைவானதாகிய மரண ஞானஸ்நானத்தை, மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தை ஆகும்.

அவர் முப்பது வயதான போது, கிடைக்கப் பெற்ற முதலாவது தருணத்திலே, இந்த மரண ஞானஸ்நானத்திற்கு தன்னை அர்ப்பணித்து, அவருடைய ஊழியத்தின் மூன்றரை வருடங்களில், – அனுதினமும் செத்து, தன்னுடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி – அவருடைய வாழ்க்கையை, அவருடைய சக்தியை, அவருடைய பெலத்தை பயன்படுத்தி பிதாவின் ஊழியத்திற்கும், தன்னை பின்பற்றி வருபவர்களின் ஊழியத்திற்கும், இன்னும் விரிவாக சொல்லப்போனால் தன்னுடைய சத்துருக்களுக்கான ஊழியத்திற்கும், அந்த அர்ப்பணிப்பினால் செய்யப்பட வேண்டியவைகளை கவனமாக செய்து முடித்தார். இறுதியில் இந்த மரண ஞானஸ்நானம் அருகில் வந்ததை அவர் உணர்ந்து, அது முற்றுமாக முடிவு பெறுவதை உணர்ந்து, பாரங்களையும், சோதனைகளையும், கஷ்டங்களையும் உணர்ந்து, ஒவ்வொரு வினாடியும் மனப்பாரம் அதிகரித்து, அதிகரித்து வருவதை உணர்ந்து, '' ஜனங்களில் ஒருவரும் அவரோடு இருந்ததில்லை'' என்கிற வாக்கின்படி அவருக்காக பரிதபிக்கக் கூடியவர் ஒருவரும் இல்லாதிருக்கும் போது, அவர் இருந்த சூழ்நிலையையும், நிலைமையையும் புரிந்து கொள்ள ஒருவரும் இல்லாததை உணர்ந்து, அவருடைய துக்கத்தில் பங்கேற்கும் வகையில், அனுதாபத்தையோ, தைரியத்தையோ, தேறுதலையோ தரக்கூடியவர்கள் ஒருவரும் இல்லை என்பதை உணர்ந்து, சோதனையின் முடிவுக்காக ஏங்கிய வண்ணம், ''அது முடியுமளவும் (மரண ஞானஸ்நானம்) எவ்வளவோ (கஷ்டத்தில்) நெருக்கப்படுகிறேன்'' (லூக். 12:50) என்று





கூறினார். பின்னர், கொஞ்ச காலத்துக்குள்ளே ''எல்லாம் முடிந்தது'' என்று கூறி மரித்த போது, அவருடைய ஞானஸ்நானம் நிறைவுற்றது.

ஆண்டவரும் அவருடைய சபையும் மாத்திரமல்ல, முழு உலகமும் மரித்துக்கொண்டு இருக்கிறது; ஆனால் கிறிஸ்துவின் மரணத்தில் அவருடைய சரீரமான சபை பங்கெடுப்பது போன்று உலகம் பங்கெடுப்பதில்லை. அங்கே பெரிய வித்தியாசமுண்டு. பிதாவாகிய ஆதாம் அவனுடைய தண்டனை அல்லது சாபத்திற்கு கீழாக மரித்திருக்கும் போது அவனோடு கூட முழு உலகமும் மரித்திருக்கிறது. ஆனால் நம்முடைய ஆண்டவர் உலகத்தாரல்ல, அவர் ஆதாமுக்குள் மரித்தவர்களில் ஒருவராக இல்லை. அவருடைய வாழ்க்கை பரிசுத்தமானதும் எல்லா பாவிகளிலுமிருந்து விலகினதுமாய் இருந்தது என்பதை மாத்திரமல்ல, அவருடைய தாயார் உலகத்தவராய் இருந்தும்கூட, அவர் ஆக்கினைக்குட்பட்டிருக்கவில்லை என்பதையும் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். அப்படியெனில் அவர் ஏன் மரித்தார்? அவர் ''நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்'' –அவருடைய மரணம் ஈடுபலியாக இருந்தது என்று வேதாகமம் கூறுகிறது. அவருடைய சரீரமான சபையும் கூட அப்படியாகதான் இருக்கிறது; அது அவருடைய மரணத்திற்கேதுவான ஞானஸ்நானத்தின் மூலம் அவருக்குள் ஞானஸ்நானம் பெற்று இருக்கிறது; அவருடைய ஈடுபலி மரணத்தில் அவரோடு கூட பங்கு பெறுகிறது. சுபாவத்தின்படி ஆதாமின் பிள்ளைகளாகவும், ''மற்றவர்களைப் போன்று கோபக்கினையின் பிள்ளைகளாகவும்'' இருந்தார்கள். முதலாவது அவர்கள் நம்முடைய ஆண்டவர் இயேசுவின் மேலும், அவருடைய மீட்பின் கிரியையின் மேலும் வைத்த விசுவாசத்தினாலும் ஆதாமிய மரணத்தினின்று ஜீவனுக்கேதுவாக, நீதிமான்களாக்கப்பட்டுள்ளார்கள். இப்படி மரணத்திற்கேதுவான ஆதாமிய ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து ஜீவனுக்கேதுவாக நீதிமான்களாக்கப் பட்டதின் முழு நோக்கமே, அவர்கள் இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவதின் மூலம் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று, அவருடைய மரணத்தில் அவரோடு இணைந்து ஈடு பலி செலுத்துபவர்களாக இருக்கிற இந்த சிலாக்கியத்தை பெறுவதற்காகத்தான். ஆகா! ஆதாமுக்குள் மரிப்பதற்கும், கிறிஸ்துவுக்குள்ளாக மரிப்பதற்கும் இடையில் எவ்வளவு பெரிதாக ஒரு வித்தியாசம்!

இந்த ஈடுபலியில், மரணத்துக்கேதுவான ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவோடு கூட இப்பொழுது உள்ள நம்முடைய உறவில் உள்ள இரகசியமும், இதனால் வளருகின்ற உறவும், வரவிருக்கின்ற மகிமையில் அவரோடு உள்ள ஐக்கியமும் உலகத்தாருக்கு புரியாததாக உள்ளது. இருந்த போதிலும், இது ஆண்டவருக்கு உண்மையாய் இருப்பவர்களால் பாராட்டப்பட வேண்டியதாகவும், வேதாகமத்தில் அடிக்கடி ஆணித்தரமாக அறிக்கையிடப்பட்டதாகவும் இருக்கிறது. *''அவரோடு கூடப் பாடுகளைச் சகித்தோமானால், அவரோடே கூட ஆளுகையும் செய்வோம்.'' ''ஆகையால் கிறிஸ்துவுடனே கூட நாம் மரித்தோமானால், அவருடனே கூடப் பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம்.'' ''நாம் பிள்ளைகளானால், சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே; கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் (அவருடைய சரீரத்தின் அங்கங்களாக மரணத்துக் கேதுவான ஞானஸ்நானத்தை நாம் பெற்றால்)அப்படியாகும்.'' 2 தீமோ. 2:12; ரோம. 6:8; 8:17.*

நாம் பார்த்துக் கொண்டிருக்கிற நான்காவது வசனத்தில், அப்போஸ்தலர் இன்னொரு கோணத்திலிருந்து இதே கருத்தை மறுபடியும் கூறுகிறார். *''அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினால் நாம் கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம்.''* மறுபடியும் தண்ணீர் ஞானஸ்நானத்தை குறித்து சொல்லப்பட வில்லை, ஆனால் மரணத்திற்கேதுவான ஞானஸ்நானத்தைக் குறித்து, மரணபரியந்தம் என்று நாம் செய்துகொண்ட அர்ப்பணிப்பைக் குறித்து திட்டவட்டமாய் கூறப்பட்டுள்ளது. தொடர்ந்து அப்போஸ்தலர் விளக்கமாக கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக நாம் ஞானஸ்நானம் பெற்றதின் காரணம் என்ன என்று பின்வருமாறு கூறுகிறார். *''பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளவேண்டும்''* என்கிறார். நம்முடைய ஆண்டவரின் இராஜ்யத்தில் அவருடைய மகிமையில் நாம் பங்கடைவோம் என்கிறார்; இந்த இடத்தில் அப்போஸ்தலர் முதலாம் உயிர்தெழுதலில் நம்முடைய பங்கைக் குறித்து மறைமுகமாக குறிப்பிடுகிறார். முக்கியமாக தற்போதைய வாழ்க்கையைக் குறித்து அவர் குறிப்பிடுகிறார். அவரோடு மரிக்கவும், சத்தியத்தின் ஊழியத்தில் அவரோடு கூட பலி செலுத்துகிறவர்களாய் இருக்கும்படியாக தங்களுடைய வாழ்க்கையை ஆண்டவருக்கென முழுமையாய் அர்ப்பணம் செய்கின்றவர்கள்





எல்லோருமே இந்த உலகத்தில் ஜீவிக்கும் போதே தங்களை சுற்றி இருப்பவர்களிடத்தில் இருந்து வித்தியாசமானவர்களாக, வேறுபட்டவர்களாக எண்ணிக்கொள்ளவேண்டும். மற்றவர்களை ஆழமாக ஆட்கொண்டிருக்கின்ற பூலோகக் காரியங்களிலிருந்து, மரிக்கும்படியாக அவர்கள் உடன்படிக்கை செய்கிறபடியால், அவைகளை புது சிருஷ்டிக்கு ஊழியம்செய்பவைகளாக மாத்திரமே உபயோகப்படுத்தலாம். புது சிருஷ்டிகள் மீட்பரினால் பரலோக காரியங்களுக்கும் நன்மைகளுக்கும் பங்கு உள்ளவர்களாகிறார்கள், நம்மை சுற்றியுள்ள உலகம் அவைகளை பார்க்கவும் புரிந்து கொள்ளவும் முடியாது. இதோடு ஒத்திருக்கும்படியாக நம்முடைய வாழ்க்கை உலகத்தில் புதியதாய், தெளிவானதாய், நம்மைச் சுற்றி இருப்பவர்களிடமிருந்து வேறுபட்டதாய் இருக்க வேண்டும், எனெனில் பரலோக சிந்தையிலான புது ஆவியினாலும், புது நம்பிக்கைகளினாலும், புது குறிக்கோள் களினாலும் நாம் உயிரூட்டப்பட்டுள்ளோம்.

ஐந்தாவது வசனத்திற்கு வரும் போது, தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறித்து இன்னமும் சின்ன குறிப்பைக் கூட அப்போஸ்தலர் கூறவில்லை, இருந்தாலும் சிலர் அவருடைய வார்த்தைகளைக் குறித்து முதலாவது வேறு விதமாய் சிந்திக்கலாம். *''ஆதலால், அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப் பட்டவர்களானால், அவர் உயிர்தெழுதலின் சாயலிலும் இணைக்கப் பட்டிருப்போம்.''* அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப் பட்டவர்களானால் என்பது தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது என்று அர்த்தப்படுத்திக் கொள்வோம் என்றால், உலகத்தில் உள்ள எந்த போதகரும் ஒத்துக்கொள்ள விரும்பாத அளவுக்கு தண்ணீர் ஞானஸ்நானத்தின் மேல் அதிகமாக கவனம் செலுத்துவதாகும். கிறிஸ்தவர்களாயிருக்கிற நாம் எதை ஆர்வத்துடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்? ஆண்டவருடைய உயிர்த்தெழுதலில், முதலாம் உயிர்தெழுதலில் நாம் பங்கடைவோம் என்பதை இல்லையா? இதைத்தான் அப்போஸ்தலர் தனது மனதில் உள்ள பெரிய உன்னதமான கருத்தும், நம்பிக்கையும் என்று பின் வருமாறு கூறினார். *''இப்படி நான் அவரையும், அவருடைய உயிர்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற் கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருப்பதற்கு தகுதியாக வேண்டும்.'' (பிலி. 3:10,11)* ரோம. 6:5 ல்

சொல்லப்பட்டதை, தண்ணீரில் முழுகுவதனால் வரும் நிச்சயமான பலன் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் பங்கடைதல் என்று புரிந்து கொள்ளுவது, இந்த பகுதியை மற்ற பகுதிகளிலிருந்து முரண்பாடுள்ளதாய் ஆக்குவதோடு நியாயமானதை அபத்தமாக்குவதாகும். ஏன் ஒரு இணைக்கப்படுதல் அல்லது தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதல் முதலாம் உயிர்த்தெழுதலில் ஒரு பங்கை ஏற்படுத்த வேண்டும்? இணைக்கப்பட்டுள்ள, அடக்கம் பண்ணப்பட்டுள்ள அல்லது தண்ணீரில் முழுக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கானோர் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலான முதலாம் உயிர்த்தெழுதலில் ஒரு போதும் பங்கடைய மாட்டார்கள் என்று நாம் நிச்சயமாக நம்பலாம்.

மரணத்துக்குள்ளான ஞானஸ்நானம், மரணத்தில் இணைக்கப்படுதல், கிறிஸ்துவின் மரணத்தின் சாயலில் இணைக்கப்படுதல் என்பவைகளை பார்க்கும்படியாக, இதற்கு முன்னதாக உள்ள இரண்டு வசனங்களோடு இசைந்து இந்த வசனத்தை நாம் புரிந்து கொள்ளும் போது, எல்லாம் தெளிவாகவும், நியாயமானதாகவும் இருக்கிறது. அவருடைய குமாரனோடு உடன் சுதந்தரராய் இருக்கும்படியாகவும், அவரோடுகூட உபத்திரவத்தை அனுபவிக்கவும், அவரோடு மரிக்கவும், அவரோடு ஜீவிக்கவும் அவரோடு அரசாட்சி செய்யவும், ஆண்டவரால் அழைக்கப்பட்டிருக்கும்போது, இந்த அழைப்புக்கு நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தால், நாம் அவரோடு இணைக்கப்பட்டிருந்தால் அல்லது அவருடைய மரணத்தில் அடக்கம்பண்ணப்பட்டிருந்தால்– அதாவது தேவனுடைய உண்மையான போர் வீரர்களாய், சத்தியத்தின் ஊழியக்காரராய் இருந்தால் எவ்வளவு நிச்சயமாய் உணருவோம். காலகாலத்தில் இப்படிப்பட்டவர்களுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணின முழுவெகுமதியான, முதலாம் உயிர்த்தெழுதலில், மகிமைக்கும், கனத்திற்கு அழியாமைக்கும் ஒரு பங்கைப் பெறுவோம்.

நம்முடைய ஆண்டவருக்கு மரணத்திற்குள்ளான ஞானஸ்நானம், உண்மையான ஞானஸ்நானமாக இருந்தது போன்று, சபைக்கும் உண்மையான ஞானஸ்நானமாக இருக்கிறது. தண்ணீர் ஞானஸ்நானம், மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்திற்கு ஒரு அடையாளமாக, அல்லது ஒரு விளக்கமாக மாத்திரமே ஆண்டவருக்கு இருந்தது போன்று நமக்கும் இருக்கிறது. அவருடைய சீடர்களில் இரண்டு பேரான யாக்கோபும் யோவானும் ஆண்டவரிடம் முடிவில் அவருடைய இராஜ்யத்தில் ஒருவன் அவரது வலது பாரிசத்திலும், ஒருவன் அவரது இடது பாரிசத்திலும் உட்காரும்படி வாக்களிக்க வேண்டும் என்று கேட்ட போது, அவர்களுக்கு ஆண்டவர் கூறிய வார்த்தைகளின்படி இது திட்டவட்டமாக காட்டப்பட்டுள்ளது. ‘‘நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்கே தெரியவில்லை......நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா?’’ என்று நம்முடைய ஆண்டவர் பதில் கூறினார். அவர்கள் அவருடைய அவமானத்தில் மட்டுமல்லாது, மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்திலும் பங்கு பெற அவர்களுடைய விருப்பத்தை அறிக்கை செய்த போது, ஆண்டவர் அதை ஆமோதிக்கும் வண்ணமாக பதில் கூறுகிறார்: ‘‘நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்.’’ (மாற்கு 10:35–39) அவரால் அழைக்கப் பட்டவர்களில் தங்களுடைய இருதயத்தில் இப்படிப்பட்ட அனுபவங்களுக்காக வாஞ்சிக்கிறவர்களுக்கு ஆண்டவர் இந்த சிலாக்கியத்தையும், அவருடைய உதவியையும் அருளுவார். இப்படிப்பட்டவர்கள் உண்மையிலேயே கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஸ்நானம் பெறுவார்கள், மேலும் இதன் பலனாக அவரோடு முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு பெறுவதோடு அதோடு கூட வருகின்ற இராஜ்யத்தின் மகிமையிலும் ஒரு பங்கை பெறுவார்கள். இந்த இடத்தில் நம்முடைய ஆண்டவர் தண்ணீர் ஞானஸ்நானத்தைப் பற்றி குறிப்பிடவில்லை என்பது தெளிவாகிறது. எப்படியெனில் இந்த இரண்டு சீடர்களும் அவருடைய ஊழியத்தின் ஆரம்ப நாட்களிலேயே அவரோடு இருந்து, அவருடைய பிரதிநிதிகளாக யோவான் கொடுத்த ஞானஸ்நானமான ‘‘பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற’’ ஞானஸ்நானத்தை திரளான ஜனங்களுக்கு தண்ணீரில் கொடுத்து வந்தார்கள். (யோவா. 3:22,23; 4:1,2; மாற்கு 1:4) அவருடைய ஸ்நானத்தில் பங்குபெற அவர்களிடத்தில் வாஞ்சையிருக்கிறதா என்று ஆண்டவர் கேட்டதை அப்போஸ்தலர்கள் தவறாக புரிந்துகொள்ளவில்லை. தண்ணீரில் மறுபடியும் ஸ்நானம் பெற வேண்டும் என்று அவர் விரும்பினார் என்ற எண்ணம் அவர்களிடத்தில் இல்லை. அவர்கள், தங்களுடைய சித்தத்தை அவருடைய சித்தத்திலும் பிதாவின் சித்தத்திலும் இருக்கும்படியான ஸ்நானம் என்று அவர்கள் நன்கு புரிந்து கொண்டார்கள். அதன்படி அவருடைய ஈடுபலியில் – அனுதினமும் மரிப்பது, சகோதரர்களுக்கென தங்களுடைய ஜீவனைக் கொடுப்பது, அதுவும் இறுதிவரை, உண்மையான மரண பரியந்தம் அவர்கள் பங்கு பெற்றார்கள்.

# “ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்”

***1 கொரி. 12:12,13***

“அவருடைய மரணத்திற்குள்ளாக” என்று நம்முடைய ஆண்டவரோடு மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவதைக்குறித்து கூறும்போது, பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறுவது என்று பொருள்படும்படியாக கூறினார் என்று ஒருவரும் அப்போஸ்தலரை தவறாக புரிந்து கொள்ளக் கூடாது. மரணமும், பரிசுத்த ஆவியும் மிகவும் தெளிவாக வித்தியாசமானது, மேலும் இரண்டு ஞானஸ்நானங்களும் தெளிவாக வித்தியாசமானதாக உள்ளது. மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் என்பது ஒரு தனிப்பட்ட விஷயமாகும். இதில், கிறிஸ்துவின் சரீரமான சபையில் அங்கங்களாகும் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் அவனுடைய சித்தத்தை அர்ப்பணிக்கவும் பலியாக செலுத்தவும் வேண்டும். இதன் பிறகு, அவனுடைய பலி ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆண்டவர் தன்னுடைய ஆவியின் மூலம், மரணபரியந்தம் அவனுடைய வாழ்க்கையை சத்தியத்திற்கும், சகோதருக்கு ஊழியம் செய்வதிலும் பயன்படுத்த உதவி செய்கிறார். பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் என்பது முழு சபைக்கான ஒரே ஞானஸ்நானம் ஆகும். அது பெந்தெகொஸ்தே நாளில் மேலறையில் நடந்தது, மறுபடியும் அதற்கு தேவை ஏற்படவில்லை, ஏனெனில் அன்றிலிருந்து இன்றுவரை சபையோடு அது தங்கியிருப்பது நின்றுவிடவில்லை. கொர்நேலியுவின் விஷயத்தில் வெளிப்படையாக காணப்பட மறுபடியும் கொடுக்கப் பட்டதற்கான காரணம், அது யூதர்களுக்கானாலும் புறஜாதியாருக் கானாலும் எந்த விதமான வித்தியாசத்தையோ அல்லது வேற்றுமையோ ஆண்டவர் காட்டுவதில்லை என்பதை பேதுருவுக்கும், எல்லா யூத விசுவாசிகளுக்கும், கொர்நேலியுவுக்கும் எல்லா புறஜாதி விசுவாசி களுக்கும் ஒரு சாட்சியாக இருக்கும்படியாகவே ஆகும். பெந்தெகொஸ்தே ஸ்நானம் மேலறையை பரிசுத்த ஆவியினால் நிரப்பியதன் மூலம் நிறைவேற்றப்பட்டது என்று நமக்கு சொல்லப்பட்டது, அதன்படியாக அங்கே கூடியிருந்த 120 சகோதரர் அனைவரும் பரிசுத்த ஆவிக்குள் ஸ்நானம் பெற்றார்கள், மற்றவர்களைக் காட்டிலும், அப்போஸ்தலர்கள் திவ்விய சிலாக்கியத்தைப் பெற்றதற்கு





அடையாளமாக தங்கள் தலைகள் மேல் அக்கினிமயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு காணப்பட்டது.

பரிசுத்த ஆவியினால் பெற்ற இந்த அபிஷேகம், பரிசுத்த அபிஷேக தைலத்தால் இஸ்ரயேலின் பிரதான ஆசாரியர்களும் இராஜாக்களும் அபிஷேகம் பண்ணப்பட்டதற்கு ஒத்திருந்தது. தைலம் தலையின் மேல் ஊற்றப்பட்டு சரீரத்தில் வழிந்தோடியது. தலையின் மேல் ஊற்றப்பட்ட இது 30வது வயதில் தன்னை அர்ப்பணித்த வேளையில் பரிசுத்த ஆவி அவருக்கு பிதாவினால் “அளவில்லாமல்” கொடுத்ததற்கு நிழலாட்டமாய் உள்ளது. (யோவா. 3:34) பெந்தெகொஸ்தே பூரணமாய் வந்த பிறகு, நம்முடைய மகிமையான தலையானவர் பிதாவின் சமூகத்தில் தோன்றி தன்னுடைய ஜனங்களுக்காக பாவ நிவாரணத்தை செலுத்தியபோது அவருடைய சபையை ஸ்நானம் பண்ணும்படியாக பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியை ஊற்ற அவர் அனுமதிக்கப்பட்டார், இப்படியாக செய்வதினால் அவர்கள் ஆண்டவராலும், பிதாவினாலும், அவருடைய சரீரமான சபையின் அங்கங்களாக, புது சிருஷ்டியின் அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப் பட்டார்கள் என்பதை குறிப்பிடும்படியாயிற்று. அவருடைய சரீரமான சபை அப்பொழுதிலிருந்து வளர்ச்சியுறுகிறது, பரிசுத்த ஆவியும் அதற்குள்ளும் அதன் மேலும் தொடர்ந்து வந்திருக்கிறது; மேலும் ஒவ்வொரு புது அங்கமும் அவருடைய சரீரமான சபையில் சேர்க்கப்படும்போது, ஒவ்வொருவரும், சரீரமான சபைக்கு சொந்தமானதாக அதற்குள்ளாக பரவுகின்ற ஆவியின் ஒரே ஞானஸ்நானத்தில் ஒரு பங்கை பெறுபவராகிறார்.

நாம் பார்த்துக்கொண்டிருக்கிற பகுதி, ஆவியின் இந்த பெந்தெகொஸ்தே ஞானஸ்நானத்தையும், மரணத்திற்குள்ளாக தனிப்பட்ட நம்முடைய ஞானஸ்நானத்தையும் இணைத்து, இரண்டிற்கும் இடையில் உள்ள உறவைக் காட்டுகின்றது. நீதிமான்களாக்கப் பட்ட மனிதர்களாகத்தான் நாம் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகின்றோம்; புது சிருஷ்டியின் அங்கங்களாகத்தான், நாம் பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப் படுகிறோம்; கிறிஸ்துவின் சரீரமான சபையின் அங்கங்களாக சேர்த்துக்கொள்ளப் படுகிறோம். நம்முடைய பலி ஏற்றுக்கொள்ளப்பட்டு, நம்முடைய தலையாகிய நம்முடைய ஆண்டவரோடு “அவரோடு மரித்தோம்” என்று எண்ணப்படுவதற்கு முன்பாக, நாம் ஏற்கனவே பார்த்துள்ளபடி, நம்முடைய மீட்பரில் நாம்

வைக்கின்ற விசுவாசத்தின் மூலம், முதலாவதாக நாம் ஆதாமிய பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் வெளியே வரும்படி நீதிமான்களாக்கப்பட்டிருக்க வேண்டும். ஆகவே அதன்பிரகாரம் நாம் முதலாவதாக நீதிமான்களாக்கப்பட்டிருக்கிற நம்மை அர்ப்பணித்து அல்லது பலியாக செலுத்தி, மரிக்கும் நிலை தொடங்குவதற்கு முன்னர் நாம் புது சிருஷ்டியின் அங்கங்களாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். இப்படிச் செய்வது ஆண்டவருடைய கிருபையால் நம்முடைய மரணத்திற்குள்ளாக முழு ஞானஸ்நானத்திற்கும், ஆண்டவரின் மரணத்தின் சாயலின் ஞானஸ்நானத்திற்கும் வழிவகுக்கும். இதன் விளைவாக அவருடைய ''முதலாம் உயிர்த்தெழுதலில்'' ஒரு பங்கை உறுதி செய்யும். இது நாம் ஏற்கனவே பார்த்ததற்கு இசைவாய் இருக்கிறது. அதாவது நாம் நீதிமான்களாக்கப்பட்டது, கிறிஸ்துவின் சரீரமான சபையில் அங்கங்களாக, புது சிருஷ்டிகளாக்குவதில்லை. ஆனால் அப்போஸ்தலர் கூறுகிறபடி அவரோடு கூட நாம் பெறுகிற மரணத்திற்குள்ளான ஞானஸ்நானம் கிறிஸ்துவின் சரீரமான சபையில் அங்கங்களாக, புது சிருஷ்டிகளாக்குகிறது. ''எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அனேகம்...... அந்தப் பிரகாரமாக கிறிஸ்துவும் இருக்கிறார்......... எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப் பட்டோம்.'' *1 கொரி. 12:12,13.*

இந்த சுவிசேஷ யுகம் ''கர்த்தருடைய அனுக்கிரக வருஷமாகும்.'' இந்த காலத்தில் விசுவாசிகளின் பலிகளையும், அவர்கள் மரணபரியந்தம் செய்து கொண்ட முழு அர்ப்பணிப்பையும் ஏற்றுக் கொள்ள விருப்பமுள்ளவராய் இருந்திருக்கிறார். யுகத்தின் அழைப்புக்கு, இப்படியாக பதிலளித்தவர்கள் உடனடியாகவே ஒரு இடத்திற்கு, பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற் பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையில் ஒரு அங்கத்துவத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். ஆனால் இந்த ஏற்றுக் கொள்ளப்படுதல் என்பது விஷயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விடுவதில்லை. அர்ப்பணம் செய்து கொண்ட அனைவரும் அனுதினமும் மரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுகிறது, எப்படியெனில் முழு அர்ப்பணிப்பின் முழு நோக்கமும் அனுதினமும் கடைபிடிக்கப்பட வேண்டும், அதாவது அவர்கள் ''எல்லாம் முடிந்தது'' என்று இறுதியாக சொல்லக் கூடிய வேளைவரும் வரை கடைபிடிக்கப்பட வேண்டும். பலி செலுத்துவதில்



நிலைத்திருத்தாலும், நன்மை செய்வதில் நிலைத்திருத்தாலும், பொறுமையுடனும் உண்மையுடனும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பது அர்ப்பணிப்பின் எதிர்பார்ப்பாகும். முடிவு என்பது, நம்முடைய ஆண்டவரும், தலையுமாயிருக்கிறவருக்கு மரணமாக இருந்தது போல, நமக்கும் உலகப்பிரகாரமான மரணமாக இருக்கிறது. ''நீங்கள் தேவர்கள் (ஏலோகிம், வல்லமையுடையவர்கள்) என்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன். ஆனாலும் நீங்கள் மனுஷரைப்போலச் செத்து, லோகப் பிரபுக்களில் ஒருவனைப் போல விழுந்து போவீர்கள்'' –லோகப்பிரபுவான ஆதாமைப் போல அல்ல, குற்றவாளிகளாக அல்ல; ஆனால் பிரபுவான இயேசுவைப் போன்று –அவருடைய மரணத்தில் பங்கேற்பவர்களாக. *(சங் 82:6,7)* இந்த உண்மை நிலையும், அனுதினமும் மரித்தலும் நம்முடைய அழைப்பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதிபடுத்திக்கொள்ள தேவையாயிருக்கிறது. இப்படியாக ஆண்டவரின் அடிச்சுவடுகளில் நடப்பவர்களுக்கே, அவர் புது சிருஷ்டியின் அங்கங்களாக ''தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்'' என்ற நிலைக்கு வருபவர்களுக்கென ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறதை, உண்மையாக ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு, மகிமையையும், கனத்தையும், அழியாமையையும் வாக்குத்தத்தம் பண்ணுகிறார். ''நீ மரணபரியந்தமும் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்'' *(வெளி 2:10)* என்பது நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளாகும். அப்படியெனில் சபையின் ஆண்டவரும் தலையுமாயிருக்கிறவருக்கு உள்ளது போல சபைக்கும் உள்ளது என்று காண்கிறோம். அதாவது, அர்ப்பணிப்பு ஆவியின் முதல் கனிகளைக் கொண்டு வருகிறது என்றும், அனுதினமும் உண்மையாயிருப்பது ஆவியினாலுண்டான ஆசீர்வாதங்களைக் கொண்டு வருகிறது என்றும், அதிகதிகமாக மகிழ்ச்சியையும், கனிகளையும் கொண்டு வருகிறது என்றும் காண்கிறோம். முழு உரிமையை, அதாவது முதலாம் உயிர்த்தெழுலிலும், அதன் மகிமையிலும் கனத்திலும் ஒரு பங்கைப் பெறுவதற்கு உண்மையான மரணத்தில் உடன்படிக்கையை தவறாது முடிப்பது மிக அவசியமானது என்பதையும் நாம் காண்கிறோம். *எபே. 1:12–14 ; ரோம. 8:16,17.*

## அக்கினி ஞானஸ்நானம்

''அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்'' என யோவான் ஸ்நானகன் இயேசுவைக்

குறித்து யூதர்களிடத்தில் அறிக்கையிட்டதை நாம் ஏற்கனவே(தொகுதி 5, அதி. 9) ஆழமாகப் பார்த்துள்ளோம் (மத் 3:11). இப்படியாக உண்மையான இஸ்ரயேலர்மேல் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்தையும், அந்த தேசத்தில் எஞ்சியுள்ளவர்கள்மேல் தேவனுடைய கோபத்தின் அக்கினியான ''கோபாக்கினை பூரணமாய்'' (1 தெச. 2:16) வந்ததையும் சுட்டிக் காட்டுவதை நாம் ஏற்கனவே ஆழமாகப் பார்த்துள்ளோம். அக்கினி ஞானஸ்நானம் என்பது ஒரு ஆசீர்வாதமும் அல்ல, கிறிஸ்துவ மக்கள் சில வேளைகளில் அதற்காக ஜெபிப்பது அறிவுடையதும் அல்ல. யூத யுகத்தின் இறுதியில் அந்த ஜாதியினரில் இருந்த ''பதர்கள்'' மேல் அக்கினி ஞானஸ்நானம் வந்தது போன்று, கிறிஸ்தவ உலகில், இந்த யுகத்தின் இறுதியில் களைகளைப் போன்று இருப்பவர்கள் மேல் இப்படியான ஒரு அக்கினி வரும் என நம்முடைய ஆண்டவர் சுட்டிக் காட்டுகிறார். அதாவது, ஒரு அக்கினி ஞானஸ்நானம், பயங்கரமான ஆபத்து- ''யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிருந்த ஆபத்து காலம் வரும்.'' தானி. 12:1.

## அடையாளமான தண்ணீர் ஞானஸ்நானம்

கிறிஸ்தவ மக்கள் மத்தியில் நடைமுறையிலுள்ள பல்வேறு தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறித்தும், உலகம் முழுவதும் அவர்கள் மத்தியில் அதுதான் உண்மையான ஞானஸ்நானம் என்று தவறாக கிட்டத்தட்ட அனைவராலும் புரிந்து கொள்ளுப்படுவதில் கவனத்தை செலுத்துமாறு ஏற்கனவே கேட்டுள்ளோம். இருதயத்தை தொட முடியாத இந்த தண்ணீர் ஞானஸ்நானத்தை சார்ந்து இருக்கும்படியாக செய்யப்பட்ட சோதனைகள் எவ்வளவு பொய்யானதும் முரண்பாடு உள்ளதாயும் இருக்கிறது என்பதைக் காட்டியுள்ளோம். அவைகள் ஏறத்தாழ அடையாளமாகத் தோன்றவில்லை, ஏனென்றால் கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக உண்மையான ஞானஸ்நானத்தை, அவர்கள் தெளிவாக பகுத்தறியவில்லை. கிறிஸ்துவின் சரீரமான சபையைப் பெறுத்த வரையில், உண்மையான ஞானஸ்நானத்தை சோதித்து அறிவது எவ்வளவு எளிதானதாகவும், ஆனால் எவ்வளவு சரியானதாகவும் ஆகிறது. இந்த சபையினரின் பெயர்கள், பூமிக்குரிய பதிவை சார்ந்திராமல் பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளன. இந்த உண்மையான ஞானஸ்நானம் உண்மையிலேயே உண்மையான சபைக்குள் நுழைவதற்கு வாசலாக உள்ளது. ஏனெனில் முதலாவதாக அவன் தன்னுடைய சித்தத்தில், இருதயத்தில், கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளான





ஞானஸ்நானத்தை அனுபவித்திராவிட்டால், ஒருவரும் கிறிஸ்துவின் சரீரமான சபையில் ஒரு அங்கத்தினராக சேர்த்துக் கொள்ளப்பட முடியாது; மேலும் இப்படியான வழியில் அவருடைய சபையில் அங்கத்தினனாக சேர்த்துக் கொள்ளப்படுவது என்பது ''கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை நிறைவேற்றுவது''ஆகும். (கொலோ. 1:24) ஆம்! இப்படியான அர்ப்பணிப்பை செய்கிற விசுவாசிகள், ஆண்டவரோடு அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிற விசுவாசிகள் எல்லோரும் உண்மையான கோதுமையாக இருக்க வேண்டும், இவர்களில் எவரும் களை இல்லை. தண்ணீர் என்கிற கதவு வழியாக ''பேப்டிஸ்ட் சபைக்குள்'' கோதுமையும், களையும் அனுமதிக்கப்படலாம்; ஆனால் மரணத்திற்குள்ளான ஞானஸ்நானம் என்ற கதவு, கோதுமை வகுப்பாரை மாத்திரம் அனுமதிக்கும், ஏனெனில் வேறு எவரும் இப்படியான நிபந்தனைக்குள்ளாக வருவதற்கு முயற்சி செய்ய மாட்டார்கள்; ஆனாலும், சில களைகள் ஒரு வகையில் கோதுமை போல போலியாக காணப்படலாம்.

இந்த கோணத்திலிருந்து நாம் பார்க்கும் போது, பிரஸ்பெடேரியன், மெதடிஸ்ட், லுத்தரன், எபிஸ்கோபல், ரோம கத்தோலிக்கர் போன்றவர்கள் மத்தியிலும், மேலும் பேப்டிஸ்ட், சீஷர்கள் சபை மத்தியிலும்கூட, இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக, அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள்- உண்மையான சபையின் அங்கத்தினர்கள் காணப்படலாம். இன்னொரு பக்கம், நிச்சயமாகவே எல்லா சபைப் பிரிவுகளில் உள்ள பெரும்பான்மையோர் (பேப்டிஸ்ட், சீஷர்கள் சபை உட்பட) உண்மையான சபையான கிறிஸ்துவின் சரீரமான சபையில் பங்கோ அல்லது பாத்யமோ இல்லாதிருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் அவருடைய மரணத்திற்குள்ளான உண்மையான ஞானஸ்நானத்தின் மூலம், உண்மையான வாசல் மூலம் உண்மையான சபைக்குள்ளாக வராதிருக்கிறார்கள். இந்த விகிதாச்சாரம் மிகக்குறைவாக, விவாதத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது.

இப்படியாக, அப்போஸ்தலர் செய்கிற வண்ணம், உண்மையான ஞானஸ்நானத்தின் மேல் எல்லா பாரத்தையும் வைத்து விட்டு, நாம் அதன் அடையாளத்திற்கு திரும்புகிறோம்; அதாவது தண்ணீர் ஞானஸ்நானத்திற்கும் திரும்பி முதலாவதாக நாம் கேட்பது, உண்மையான

ஞானஸ்நானம் பெறுபவர்களுக்கு அடையாளம் என்பது சரியானதா அல்லது அவசியமானதா? அப்படியென்றால், இரண்டாவதாக நாம் கேட்பது எது சரியான அடையாளம்?

## அடையாளமான ஞானஸ்நானம் அவசியமானதா?

ஆண்டவருடைய சாட்சியும், அப்போஸ்தலர்களுடைய சாட்சியும் அடையாளமான, தண்ணீர் ஞானஸ்நானம் சரியானதே என்று காட்டுகிறது. எப்படியெனில், அவர்கள் தண்ணீரினால் ஞானஸ்நானம் பெற்றது மாத்திரமல்ல, அவர்கள் மற்றவர்களுக்கும், யூதர்களுக்கு மாத்திரமல்ல, மனம் திரும்பிய புறஜாதியினருக்கும் தண்ணீர் ஞானஸ்நானத்தைக் கற்பித்தார்கள் என்பதை நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். நம்முடைய ஆண்டவராகிய இயேசுவின் ஞானஸ்நானம், யோவான் யூதர்களுக்கு கொடுத்த ஞானஸ்நானத்திலிருந்து வித்தியாசமானது மாத்திரமல்ல, தனிதன்மை வாய்ந்தது என்றும், அது மனதிரும்புதுலுக்கேற்ற பாவமன்னிப்புக்குரியது அல்ல என்றும் முன்பே பார்த்திருக்கிறோம். மேலும் யோவான் விஷயத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்றும், நம்முடைய ஆண்டவரும், இப்படியாக தன்னுடைய மரணத்தைக் குறித்து ஒரு அடையாளத்தை ஏற்படுத்தியபோது, அந்த நாட்களில் யோவானும் மற்றவர்களும் புரிந்து கொண்டிருக்க முடியாததை விளக்க முற்படவில்லை, ஏனெனில் நம்முடைய பாவங்களுக்காக இயேசு இன்னும் பலியை செலுத்தவதை நிறைவேற்றாது இருந்தபடியால், பரிசுத்த ஆவி இன்னும் கொடுக்கப்படாதிருந்தது, மேலும் நம்முடைய சார்பில் பலியைச் செலுத்தும்படி அவர் இன்னும் மகிமை அடையாதிருந்தார். நம்முடைய ஆண்டவர் அப்போஸ்தலர்களுக்கும் அவர் மூலமாக நமக்கும் கொடுத்த கட்டளையை மத். 28:19,20 ல் காண்கிறோம். ‘‘ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே (அதிகாரத்தினாலே) ஞானஸ்நானம் கொடுங்கள்.’’ இந்த கட்டளை இந்த முழு சுவிஷேச யுகத்திற்கும் உரியது, இதன்படியாகத்தான், இன்றைக்கு சத்தியத்தை சொல்லுகிற எல்லா ஊழியக்காரரும் பிரயாசப்படுகிறார்கள். ஆண்டவர் இந்த இடத்தில் ஆவியின் பெந்தெகொஸ்தே ஞானஸ்நானத்தைக் குறிப்பிடவில்லை, ஏனெனில் இப்படியாக எவருக்கும் ஞானஸ்நானம் கொடுப்பது அப்போஸ்தலர்களின் அதிகாரத்தில் இல்லாதிருந்தது. ஆண்டவரிடமே, அவரிடம் மாத்திரமே இந்த அதிகாரம் இருந்தது, அவர்





அதை தன்னிடம் வைத்துக் கொண்டார். ஆனாலும், மக்கள், அவருடைய புதிய சுபாவத்திலும், வரும் மகிமையிலும் பங்குள்ளவர்களாவார் களானால், கிறிஸ்துவுக்குள் தேவ கிருபையைக் குறித்து – அவர்களுடைய நீதிமான்களாக்கப்படுதல், அவர்களுடைய பரிசுத்தமாக்கப்படுதல் அல்லது அர்ப்பணிப்பு, அல்லது கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் ஆகியவை குறித்து அவர்களுக்கு கற்றுக்கொடுக்குமாறு அப்போஸ்தலர் களுக்கும், ஆண்டவருடைய வசனத்தைப் போதிக்கிற உண்மையான போதகர்களுக்கும் இது அருளப்பட்டது. ஞானஸ்நானமானது அடையாளத்தை அல்லது தண்ணீரில் மூழ்குதலை உள்ளடக்கியதாய் இருந்தது. இது வெளிப்புற அடையாளமாக இருக்க வேண்டியதிருந்தது, இதன் மூலம் விசுவாசியின் இருதயத்தின் உள்ளான அர்ப்பணிப்பு, தன்கூட இருப்பவர்களுக்கும் தெரிய வரும்; நம்முடைய ஆண்டவரும் முதலாவது தன்னுடைய இருதய அர்ப்பணிப்பை பிதாவுடன் செய்து, பின்னர் அதை தண்ணீரில் அடையாளப்படுத்தினார்.

ஆவியினால் உந்தப்பட்ட அப்போஸ்தலர்கள் தங்களுடைய பணியையும் நம்முடைய பணியையும் நன்றாகப் புரிந்து கொண்டார்கள் என்பது அவர்களுடைய போதனைகளிலிருந்து விளங்குகிறது. முதலாவதாக, அவர்கள் மக்களுக்கு மீட்பில் தேவனுடைய கிருபையைக் குறித்து போதித்து, வாழ்க்கையில் நீதிமானாக்கப்படுவதை விசுவாசிக்கும்படி அவர்களை உற்சாகப்படுத்தினார்கள். அடுத்தபடியாக, இருதயத்தின் முழு அர்ப்பணிப்பின் அவசியத்தை அவர்களுக்கு வற்புறுத்தி பின்வருமாறு கூறினார்கள் ‘‘அப்படியிருக்க, சகோதரரே, (இனிமேலும் அவர்கள் பாவிகளல்ல, ஆனால் கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்டார்கள், ‘ஆகவே விசுவாச வீட்டாராக’ அல்லது ‘சகோதரர்களாக’ இருக்கும்படி நியமிக்கப் பட்டவர்கள்) உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் (நீதிமான்களாக்கப் பட்டவர்களாக) தேவனுக்குப் பிரியமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை (நீங்கள் நீதிமான்களாக ஆக்கப்பட்ட போது இதில், ஒரு பங்கை ஏற்கனவே பெற்றுக் கொண்டீர்கள்) முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.’’ இதுவே அர்ப்பணம் செய்யவும் அல்லது பலியாக செலுத்தவும் அல்லது அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெறவும் உண்டான அழைப்பாகும். இந்த வார்த்தையை சந்தோஷத்துடன், சரியான இருதய

நிலையோடு, விருப்பத்தோடு கேட்டவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதுமின்றி, இதற்கு வெளியரங்கமான சாட்சியாக இருக்கும்படியாக, அடையாளமாக தண்ணீரிலும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.

எல்லா அப்போஸ்தலர்களுக்கும் ஞானஸ்நானம், யூதர்களோடு மாத்திரமல்ல புறஜாதியினரோடும் பழக்கமாக இருந்தது என்பதை பின்வரும் சாட்சிகள் மூலமாக கவனியுங்கள். சமாரியாவிலுள்ள ஜனங்களைக் குறித்து நாம் வாசிக்கும் போது,'' பிலிப்பு பிரசங்கித்ததைக் அவர்கள் விசுவாசித்த போது, புருஷரும், ஸ்திரிகளும் (குழந்தைகள் அல்ல) ஞானஸ்நானம் பெற்றார்கள்.'' *(அப். 8:12)* பிலிப்புவின் பிரசங்கத்தினால் மனம் மாற்றமடைந்த எத்தியோப்பிய மந்திரிகூட தண்ணீரில் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டான். *(அப் 8:35–38)* பேதுரு கொர்நேலியுவுக்கும் அவனுடைய வீட்டாருக்கும் பிரசங்கித்தபோது ''வசனத்தைக் கேட்டவர்கள் (ஏற்றுக் கொண்டவர்கள்) யாவர் மேலும் (குழந்தைகள் கிடையாது) பரிசுத்த ஆவி இறங்கியது..... அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும் படி கட்டளையிட்டான்.'' *(அப். 10:44–48)* மறுபடியும் நாம் வாசிக்கிறோம், ''கொரிந்தியரில் அநேகரும் சுவிஷேசத்தைக் கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றார்கள்.'' *(அப். 18:8)* நாம் மறுபடியும் வாசிக்கிறோம், ''அப்பொழுது தியத்தீரா ஊராரும், இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக் கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தை திறந்தருளினார். அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.'' *(அப். 16:14,15)* பிலிப்பிய சிறைச்சாலைக்காரன் விசுவாசித்தபோது, அவனும் அவனுடையவர்கள் அனைவரும் பவுல், சீலா மூலம் ஞானஸ்நானம் பெற்றார்கள். *(அப்.16:33)* மறுபடியும் நாம் வாசிக்கிறோம், ''ஸ்தேவானுடைய வீட்டாருக்கும் நான் ஞானஸ்நானங் கொடுத்ததுண்டு.'' *(1கொரி.1:16)*

உண்மைதான், அப்போஸ்தலர் இந்த கடைசி வசனத்தில் எவ்வளவு குறைந்த எண்ணிக்கையில் ஞானஸ்நானம் கொடுத்தார் என்று குறிப்பிடுகிறார், ஆனால் இது நிச்சயமாகவே, மாம்சத்தில் அவருக்கு கொடுக்கப்பட்டிருந்த முள்ளினிமித்தம் – சரியாக இல்லாத கண் பார்வையினாலாகும்; மேலும், அவர் ஞானஸ்நானம் கொடுத்த குறைவான





எண்ணிக்கையுள்ளவர்கள் அவருடைய கரங்களிலிருந்து இந்த ஊழியத்தைப் பெற்றுக் கொண்டார்கள், ஒரு வேளை இதற்கு தகுதியுள்ள வேறு எவரும் அந்த இடத்தில் இருந்திருக்க மாட்டார்கள். வெகு சிலருக்கே ஞானஸ்நானம் கொடுத்தற்கு அவர் ஆண்டவருக்கு நன்றி செலுத்தினார்; ஆனால் உண்மையான ஞானஸ்நானத்தை குறித்தோ அல்லது அதன் அடையாளங்கள் சரியானவை என்பதைக் குறித்தோ தனது மனதை மாற்றிக்கொண்டார் என்று அர்த்தமாகாது. ஆனால் சபையில் ஒரு பிரிவினையின் ஆவி சிலரை ''நான் பவுலைச் சேர்ந்தவன்'' என்றும், மற்றவர்கள் ''நான் அப்போஸலோவைச் சேர்ந்தவன்'' என்றும், ''நான் பேதுருவைச் சேர்ந்தவன்'' என்று சொல்ல வைத்ததினால், ஒரு வாக்குவாதம் எழும்பிய காரணத்தினால், அப்போஸ்தலர் வெகு சிலருக்கே தானாக ஞானஸ்நானம் கொடுத்தேன் என்று சொல்வதில் சந்தோஷப்பட்டார். ஏனெனில், அவர் கிறிஸ்துவுக்கென்று சீஷர்களை உருவாக்காமல், கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுக்காமல், தனக்கென்றே சீஷர்களை உருவாக்கிக் கொண்டு இருக்கிறார் என்றும், தன்னுடைய நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கிறார் என்றும் யாரும் சொல்ல முடியாதபடி அவர் வெகு சிலருக்கே ஞானஸ்நானம் கொடுத்தார்.

ஆகவே, ஆண்டவரின் போதனைகள் மற்றும் பழக்கங்கள் குறித்தும், அப்போஸ்தலரின் போதனைகள் மற்றும் பழக்கங்கள் குறித்தும் வேதாகமம் தெளிவாக கூறும்போது, வேதாகமத்தில் அடையாளமான அல்லது தண்ணீர் ஞானஸ்நானம் போதிக்கப்படவில்லை என்று மிக தைரியமுள்ள மனிதன் ஒருவன் தான் கூற முடியும்; இல்லையெனில், அது யூதர்களுக்கு மாத்திரமே பொருந்தும் என போதிக்கப்பட்டது என்றோ அல்லது அறிமுகப்படுத்துவதற்கென செய்யப்பட்ட ஒரு கிரியை என்றோ சொல்லுவான். அதற்கு மாறாக, அது வித்தியாசமான முறையிலும், சடங்காச்சாராய்களினாலும், கூடக்குறைய அதன் அர்த்தத்தை குறித்த தவறான நோக்குடனும், அடையாளத்தை குழப்பி உண்மையான ஞானஸ்நானத்தின் தாத்பரியத்தை விட்டுவிட்டாலும், யூகத்தின் ஆரம்ப காலத்திலிருந்து தற்காலம் வரை இது போதிக்கப்பட்டும், கடைப்பிடிக்கப்பட்டும் வருகிறது. திவ்விய முறைமையின்படி தண்ணீர் ஞானஸ்நானம் ஏற்படுத்தப்பட்டது என்று கிறிஸ்துவ மக்கள் மதிப்பது நல்ல காரணத்தினால் தான். இன்னும் யாராவது இந்த கேள்வியை எதிர்க்க விரும்பினால் அவர்களோடு எங்களுக்கு வாக்கு வாதம் கிடையாது,

ஆனால் இப்படிப்பட்டவர் உண்மையுள்ளவராயிருந்து, தன்னுடைய சித்தத்தை ஆண்டவருடைய சித்தத்திற்கு ஒப்பு கொடுக்கிற உண்மையான ஞானஸ்நானத்தை தன்னுடைய இருதயத்தில் செய்து இருப்பாரானால், சுயத்திற்கு மரித்து தேவனிடத்தில் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் ஜீவன் உள்ளவராக இருப்பாரானால், இந்த விஷயத்தை தேவன் ஏற்ற காலத்தில் அவருக்கும் வெளிப்படுத்துவார் என்று நம்புகிறோம். *பிலி. 3:15.*

இதற்கிடையில் உண்மையான ஞானஸ்நானத்தை கண்டு பிடித்து அதில் பங்கு பெற்றவர்களோடு நாம் சந்தோஷப்படுவோம். மேலும், அடையாளத்தைக் கண்டு பிடித்து உண்மைக்கு குருடராய் இருப்பதைக் காட்டிலும், அடையாளத்திற்கு குருடராய் இருந்து, உண்மையான ஞானஸ்நானத்தை கண்டு அதில் மகிழ்ச்சி அடைவது மிகவும் மேலானது என்ற உண்மையினிமித்தம் அவர்களை நாம் பாராட்டுகிறோம். இப்படி இருக்கிறபடியால் நாம் அடையாளமான ஞானஸ்நானத்தை எவ்வளவுதான் ஆதரித்தாலும் கிறிஸ்தவ ஐக்கியத்தை அதன் மேல் சார்ந்து இருக்கும்படியாக வைக்க முடியாது, ஆனால் கிறிஸ்துவோடு கூடிய மரணத்திற்குள்ளாக உணைமயான ஞானஸ்நானத்தின் மேல் சார்ந்து இருக்கும்படியாக விரும்புவோம். ஆகவே, ஆண்டவரை தங்களுடைய மீட்பராக அறிக்கை செய்து, அவருக்கென்று தங்களுடைய இருதயத்தையும், வாழ்க்கையையும் அர்ப்பணித்த அனைவரையும், கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாக, தங்களுடைய நாமங்கள் பரலோகத்தில் எழுதப் பெற்றிருப்பவர்கள், அவர்கள் பிறப்பின்படி யூதர்களோ அல்லது புறஜாதியினரோ, அடிமையோ அல்லது சுயாதீனரோ ஆணோ அல்லது பெண்ணோ தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றவரோ அல்லது தண்ணீரினால் ஞானஸ்நானம் பெறாதவரோ, அவர்களை சபையின் அங்கங்களாக, கிறிஸ்து இயேசுவுக்குள் சகோதரராக ஏற்றுக் கொள்ளுகிறோம்.

இன்னொரு பக்கம் பார்க்கும்போது, அறிவின் ஒவ்வொரு பகுதியும், கூடுதலான சிலாக்கியத்தையும், மகிழ்ச்சியையும் கொண்டு வருவதோடு கூட அதிகமான பொறுப்பையும் கொண்டு வருகின்றது என்பதை மறந்து விடக்கூடாது. ஆகவே தண்ணீர் அடையாளத்தின் அழகையும், அதிகாரத்தையும் காண வருகின்ற எவரும், அதே வேளையில் அவனுடைய ஆண்டவரது மரணத்திற்குள்ளான உண்மையான





ஞானஸ்நானமான, அவனுடைய சித்தத்தை மரணத்திற்குள்ளாக்கும் இன்னொரு சோதனைக்கும் வருகிறான். இப்படிப்பட்ட சூழ் நிலைகளின் கீழ் அடையாளத்திற்கு கீழ்படியத் தவறுவது, பலியில் பின்வாங்குவது என்று அர்த்தமுடையதாகும் என்பது உடனடியாக விளங்கும்; மேலும், அழைப்பையையும் தெரிந்துக்கொள்ளுதலையும் நிச்சயப்படுத்துவதில் தவறிவிட்டதும் உடனடியாக விளங்கும்.

## ஞானஸ்நானத்தின் சரியான அடையாளம்

அடையாளமாக ஞானஸ்நானம் கொடுப்பது என்பது அப்போஸ்தலர் முறைப்படி தெளித்தல், ஊற்றுதல், முழுகுதல் என்பதற்கிடையே எது உண்மையானது என்பதைக் கண்டறியும்படி, ஒரு விவாதத்தை உண்டுபண்ண முயற்சிக்க மாட்டோம். இருந்த போதிலும், அவரோடு கூட தன் சுயத்திற்கும், உலகத்திற்கும் மரிக்கும்படியாக தன்னுடைய சித்தத்தை கிறிஸ்துவின் சித்தத்திற்குள்ளாக அர்ப்பணிக்கும் படியான அல்லது ஞானஸ்நானம் பெறுவதற்கு அனுமதிக்கும்படியான மனநிலையிலும், இருதயத்திலும் எந்த குழந்தையும் இருக்க முடியாது என்று நாங்கள் எடுத்துக் கூற விரும்புகிறோம். மேலும், உண்மையான ஞானஸ்நானத்திற்கு முன்பாக, அடையாளமான ஞானஸ்நானம் எவ்விதமான நியாயத்துடனும் கொடுக்கப்பட முடியாது என்று நாம் தொடர்ந்து வற்புறுத்திக் கூறுகிகிறோம்; ஏனெனில், அடையாளமான ஞானஸ்நானமானது, நம்முடைய இருதயங்களுக்கும் சித்தங்களுக்கும், ஆண்டவருக்கும் இடையில் இரகசியமாக ஏற்பட்டதற்கு வெளிப்படையான காரியமாக அல்லது அறிவிப்பாக மாத்திரமாகவே இருக்கிறது.

இவைகள் உண்மையுள்ளதாக இருக்கும்போது, பெரும்பாலான கிறிஸ்துவ மக்கள், நன்றாக அறிந்து, அவர்களுடைய அர்ப்பணிப்பின் உறுதிமொழியை எடுக்க முடிந்த பின்னரே அடையாளமான அல்லது தண்ணீர் ஞானஸ்நானத்தை ஒரு போதும் பெற்ற தில்லை என்பது தெரிய வருகிறது. அர்ப்பணிப்பிற்கு முன்னர் வயது வந்தவர்களை தண்ணீரில் மூழ்க வைப்பது சாதாரணமான குளியலை விட வித்தியாசமானதாக இருக்காது, அர்ப்பணம் பண்ணாத பாலகர் மேல் தண்ணீர் தெளிப்பதைக் போல, வெறும் ஒரு அடையாளமான ஞானஸ்நானம் கொடுப்பதைப் போன்றே இருக்கும். ஆகவே, எல்லாவற்றிக்கும் மேலாக, எது

உண்மையான தண்ணீர் ஞானஸ்நானம், எது உண்மையான அடையாளம், எது நம்முடைய ஆண்டவரால் ஏற்படுத்தப்பட்டது என்று ஊக்கமாக விசாரித்து அறிவதும், அதற்கு உடனடியாக கீழ்ப்படிவதும் அவசியமாகிறது. மேலும், சுயத்திற்கும், உலகத்திற்கும் உண்மையிலேயே மரிக்கும்படி அர்ப்பணம் செய்துகொண்ட ஒவ்வொரு இருதயமும், இதிலும், மற்ற எல்லா விஷயங்களிலும் இருப்பது போன்று தேவனுடைய சித்தத்தை அறியவும், அதன்படி செய்யவும் ஜாக்கிரதையாக இருக்கும். ''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர் களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்'' என்ற வசனத்தில் இப்படியான ஜாக்கிரதை அறிவிக்கப்பட்டுள்ளது. *(ரோ 6:11)*

ஞானஸ்நானம் கொடுக்கும் முறையைப் பற்றிய குழப்பம் அவ்வளவு அதிகமாக இருந்து, மேலும், ஆதி கால சபையின் ஒழுங்கு முறையைப் பற்றிய சாட்சி அவ்வளவு குழப்பமுடன் இருந்து, அப்போஸ்தலர் முறைமையின்படியான ஞானஸ்நானம் என்பது, தெளிப்பதினால் அல்லது ஊற்றுவதினால், அல்லது முழுகுவதினால் இருந்தது என்பதை தீர்மானிப்பதறகு நம்மை வழி நடத்தக் கூடியது ஒன்றுமே இல்லாதிருக்குமானால், தற்சமயம் உண்மையான ஞானஸ்நானம் எதைக் கொண்டு ஏற்படுத்தப்படுகிறது என்பதை தெளிவாக பார்க்கிற இடத்தில் இருக்கிறோம்; மேலும் அதன் அடையாளங்களை அல்லது அர்த்தத்தை எது காட்டும் என்பதை தெளிவாக நாம் பார்க்கக் கூடியவர்களாக இருக்கிறோம். வழக்கத்தில் காணப்பட்ட எல்லா முறைகளையும் கூர்ந்து ஆராய்ந்த பின்னர், ஒன்றே ஒன்றுதான் கிறிஸ்துவோடு மரிப்பதையும், அடக்கம் செய்யப்படுவதையும் காட்டுவது போல் இருக்கிறது. ஒருவரின் மேல் ஒரு வாளி தண்ணீர் ஊற்றப்படுவதினால், அல்லது நெற்றியின் மேல் சில அல்லது பல துளிகள் தண்ணீர் தெளிக்கப்படுவதினால், கிறிஸ்துவுடன், சுயத்திற்கும், உலகத்திற்கும் மரித்திருப்பதற்கான எந்த விதமான அடையாளத்தையும் காண இயலவில்லை. இவைகள் எவற்றிலாவது மரண சாயலுக்கு அடையாளமாக ஏதாவது இருக்குமெனில் அதை எங்களால் புரிந்துகொள்ள இயலவில்லை. ஆனால் மூழ்குதலைக் குறித்து பார்க்கும் போது ஒரே நொடிப் பார்வையில் _மரணத்திற்குள்ளாக உண்மையான ஞானஸ்நானத்தை குறிக்கின்ற ஒரு அற்புதமான, நன்றாக தெரிகின்ற, ஒரு அருமையான, ஒரு பொருத்தமான விளக்கத்தைக் காண முடிகிறது.



கிரேக்க பதமான ''பேப்டைசோ,'' மூழ்கி இருப்பது, மூடுவது, அடக்கம் செய்வது, மூழ்கடித்தல் என்று பொருள்படுவதாக இருப்பது மட்டுமல்லாமல், கிறிஸ்துவின் நாமத்தில் தண்ணீருக்குள் பின் புறமாக ஒரு முறை மூழ்குவதோடு சம்பந்தப்பட்ட எல்லா ஒழுங்கு முறையும், ஒரு அடக்கத்தை எல்லாவிதத்திலும், தெளிவாக அர்த்தப்படுத்துவதாக இருக்கிறது. இந்த அடையாளத்தில் ஞானஸ்நானம் கொடுப்பவர் நம்முடைய ஆண்டவரைக் குறிப்பதாக இருக்கிறது. ஞானஸ்நானம் கொடுப்பவரிடத்தில் ஒரு நபர் செல்வது போன்றே நாம் நம்முடைய இருதயங்களில் ஞானஸ்நானத்திற்காக ஆண்டவரிடத்தில் செல்லுகிறோம். நாம் சுயத்திற்கும், உலகத்திற்கும் நாமாகவே மரிக்க இயலாது என்று அறிக்கையிட்டு, ஆண்டவரிடம், உடன்படிக்கைக்கான உயிலை ஏற்றுக்கொள்ளும்படி கூறி, எங்களுடைய சித்தங்கள் விட்டுக்கொடுக்கப்படுகின்றன என்றும் சொல்லி, அவருடைய மரணத்திற்குள்ளாக நம்மை அடக்கம் செய்ய வேண்டும் என்று கேட்டு, நம்முடைய அர்ப்பணிப்பின் உடன்படிக்கையை சிறந்த முறையில் நிறைவேற்ற உதவிசெய்யும்படியான அனுபவங்கள், ஒழுங்குகள், ஒத்தாசைகள், சிட்சைகள் ஆகியவைகளை அவர் ஏற்படுத்துமாறு கேட்டுக்கொண்டு, நாம் நம்மை ஆண்டவருடைய கரங்களில் ஒப்புக் கொடுக்கிறோம். ஞானஸ்நானம் பெறுபவர் தன்னுடைய சித்தத்தை விட்டுக்கொடுக்கும் போது, ஞானஸ்நானம் கொடுப்பவர் அவனை மெதுவாக தண்ணீருக்குள் விடுகிறார், இப்படியாக அவன் தன் பின்பக்கமாக தண்ணீரில் உதவியற்ற நிலையில் இருக்கும்போது, மரணத்தில் நமக்கு நாமே உதவி செய்யும்படியான திறமை இல்லாதிருப்பதின் முழு விளக்கத்தை அவன் அளிக்கிறான்; மேலும் ஞானஸ்நானம் கொடுப்பவர் அவனை தன் கால்களில் நிற்கும்படி தூக்கிவிடும்போது, நம்முடைய ஆண்டவர், ஏற்ற காலத்தில் தன்னுடைய வல்லமையினால் நம்மை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்ப வாக்குத்தத்தம் பண்ணியதின் விளக்கத்தைக் காண்கிறோம். நம்மோடு கருத்து வேறுபாடு உள்ளவர்களை நாங்கள் கட்டாயப்படுத்த விரும்பவில்லை; ஆனால் இந்த அடையாளம் மிகப்பொருத்தமாக இருப்பதிலிருந்து இதனை உண்டாக்கியவர் ஆண்டவர்தான் என்பது தெள்ளத் தெளிவாகிறது. அவரைக் காட்டிலும் வேறு யார்தான் இந்த முழு விஷயத்தைக் குறித்து ஒரு அர்த்தத்தை அல்லது அடையாளத்தை உண்டு பண்ணியிருக்க முடியும்?

உண்மையான ஞானஸ்நானத்தை ஏற்கனவே நடத்தியவர் யாராக இருந்தாலும் – அவரோடு மரிக்கவும், அவரோடு அடக்கம் பண்ணப்படவும் தன்னை கிறிஸ்துவின் கரங்களில் ஒப்புக்கொடுத்தவர் யாராக இருந்தாலும், அவன் இந்த அடையாளமான அர்த்தத்தில் உள்ள அழகைக் காண்கிறான், தானும் அதை நிறைவேற்ற வேண்டும் என்று முழுமனதோடு விருப்பமுடையவனாய் இருப்பான் என்று நாம் விசுவாசிக்கிறோம். ''என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்'' என்று நிச்சயமாக அவனுடைய இருதயம் கூறும்.

இந்த அடையாளத்திற்கு கீழ்ப்படிவதினால் என்ன சிலாக்கியங்கள் கிடைக்கும்? நம்முடைய அர்ப்பணிப்பின் உறுதிமொழியின் ஏதாவது ஒரு பகுதியை மட்டும் நிறைவேற்றுவதினால் சிலாக்கியம் வந்து விடாது, ஆனால் முதலிலிருந்து கடைசிவரை உள்ள எல்லா விஷயங்களையும் நிறைவேற்றும்படியாக நாம் முயற்சிக்கும் போதும், அதாவது நாம் நம்முடைய சித்தத்தை அவருடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்ததில் உள்ள எல்லா விஷயங்களும் உள்ளடக்கம் கொண்டதாக இருக்கும் போதும், மேலும் அவருடைய அடிச்சுவட்டில் நடக்கும்படியாக ஒரு முழு முயற்சி செய்யும் போது, சிலாக்கியங்கள் எல்லாம் நம்முடையதாகும் என்று நாம் பதில் சொல்லுகிறோம். ஆனால் முழு சிலாக்கியமும், நம்முடைய யாத்திரையின் இறுதியில், முதலாம் உயிர்த்தெழுதலின்போது, அதன் மகிமையிலும், கனத்திலும், அழியாமையிலும் கிடைக்கப் பெறுவதுடன், இப்பொழுதும் கூட சிலாக்கியத்தின் ஒரு அளவு அனுபவிக்கப்படும்படியாக உள்ளது. மன திருப்தி, இருதயத்தின் சமாதானம், நம்முடைய ஆண்டவர் போன்று ''எல்லா நீதியையும் நிறைவேற்ற'' நாம் முயற்சி செய்கிறோம் என்கிற விஷயம் அவருக்கு சொந்தமானவர்கள் வாழ்க்கையில் தொடர்ச்சியாக, தடையின்றி, பெலத்துடன் பாய்கின்ற ஒரு நதியைப் போன்று இருக்கிற தேவ சமாதானத்திற்கு வழிவகுக்கிறது, இந்த சமாதானம் நம்முடைய இருதயங்களில் எல்லா புத்திக்கும் மேலாக ஆளுகை செய்கிறது.

அப்போஸ்தலருடைய சாட்சியானது: ''ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு.'' (எபே. 4:4–6) எனவே ஒரே ஒரு சரியான ஞானஸ்நானம் இருப்பது போன்று அதற்கு ஒரே ஒரு சரியான அடையாளம் தான் இருக்க முடியும். பொதுவாக கிறிஸ்தவ ஜனங்கள் தண்ணீரில் முழுகுவது என்பது





வேதாகமம் சொல்வதற்கு மிகவும் இசைவாக உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். இப்படி ஒத்துக்கொள்ளுவதற்கு அடையாளமாக, ஒரு வேளை உண்மையாகவே கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று, குழப்பம் அடைந்ததின் நிமித்தமாக அதன் தண்ணீர் அடையாளத்தை சரியாக புரிந்து கொள்ள அறியாதிருந்து, இறுதியில் அது தேவையற்றது என்று முடிவு செய்தவர்களின் குறிப்புகளைக் கீழே கொடுத்துள்ளோம். அதைக் கவனியுங்கள்.

## குறிப்பான சில சாட்சியங்கள்

பிரஸ்பெடேரியன் என்கிற சபையைச் சேர்ந்த ஜான் கேல்வின் என்பவர் கூறுகிறார்: ''பேப்டைசோ என்ற வார்த்தையே மூழ்குதலைத்தான் குறிக்கிறது. ஆதிகாலத்து சபையின் பழக்கம் முழுகுவதாகத்தான் இருந்தது என்பது நிச்சயம்.'' – Institutes, Bk. IV, Chap. xv, 19

பிரஸ்பெடேரியன் சபையைச் சார்ந்த Dr. மேக்னைட் என்பவர் கூறுவது: ''ஞானஸ்நானத்தில், ஞானஸ்நானம் பெறுகின்ற நபர் தண்ணீருக்கு கீழாக அடக்கம் பண்ணப்படுகிறார்.'' '' கிறிஸ்து ஞானஸ்நானம் பெற தன்னை ஒப்புக் கொடுத்தார்; அதாவது, தண்ணீருக்கு கீழாக அடக்கம் பண்ணப்படும்படியாக.''

பிரஸ்பெடேரியன் சபையைச் சார்ந்த Dr. பிலிப் ஸ்கேஃப் என்பவர் கூறுவது: ''சந்தேகத்திற்கிடமில்லாமல் ஆரம்ப காலத்தில் இருந்த உண்மையான முறை மூழ்குதல்தான், தண்ணீர் தெளிப்பதல்ல. கிரேக்கப்பதங்களான பேப்டைசோ, பேப்டிஸ்மா, பேப்டிஸ்மோஸ் என்பவைகளின் அர்த்தங்களே இவைகளைக் காட்டுகிறது.'' History of Apostolic Church, page 568.

பின் வந்த பிரசுரங்களில் (1885) இந்த ''ஒப்பிட்டுப்பார்த்தலைக்'' குறித்து அவர் மேற்கொண்டு எழுதியதாவது: ''கத்தோலிக்கர்கள், புராட்டஸ்டான்ட், மேலும் ஆங்கில, ஜெர்மன் நாட்டு சிறந்த வேத பண்டிதர்கள் ஒத்துக் கொண்டபடி, அவர்கள் அனைவரும் தண்ணீர் தெளிப்பதைக் காட்டிலும் முழுகுவதையே அதிகமாக ஆதரித்தார்கள்.'' –Teachings of the Twelve Apostles, page 55,56.

லுத்தரன் சபையைச் சேர்ந்த மார்டீன் லூத்தர்: ''ஞானஸ்நானம் (Baptism) என்பது ஒரு கிரேக்க வார்த்தை, அதை ''முழுகுதல்'' என்று மொழி பெயர்க்கலாம். ஞானஸ்நானம் பெற இருப்பவர்கள் அனைவரும்

*தண்ணீரில் முழுக வேண்டும் என்று சொல்லுவேன்.''* –Luther's Works, Vol. I, p.336.

*மெதடிஸ்ட் சபையைச் சார்ந்த ஜான் வெஸ்லி: '' ஞானஸ்நானத்தில் அவரோடு அடக்கம் செய்யப்படுதல் – ஆதிகாலத்து பழக்கமான முழுகுதலை மறைமுகமாக குறிப்பிடுகிறார்.''*

*எபிஸ்கோபல் சபையைச் சோர்ந்த வால் (* Wall *) என்பவர் : ''நம்முடைய ஆசீர்வதிக்கப்பட்ட இரட்சகர் ஞானஸ்நானம் பெற்றக் கொண்டதும், ஆதிகாலத்து கிறிஸ்தவர்களும், வழக்கமாக, சாதாரண முறையில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டதும் நிச்சயமாக முழுகுதல் மூலமாகத்தான் என்று எல்லா விதமான நிச்சயத்தோடும் கூறலாம்.''*–Hist. Infant Baptism, Vol. I, p.571, Oxford, *1862.*

*எபிஸ்கோபல் சபையைச் சோர்ந்த டீன் ஸ்டேன்லி என்பவர்: ''முதல் 13 நூற்றாண்டு வரை கிட்டத்தட்ட முழு உலக வழக்கமும் ஞானஸ்நானம் கொடுப்பது என்பது, நாம் புதிய ஏற்பாட்டில் வாசிக்கிறபடி ''பேப்டைஸ்'' என்ற வார்த்தையின் அர்த்தப்படிதான் – ஞானஸ்நானம் பெற்றவர்கள் தண்ணீருக்குள் மூழ்கினார்கள், அமிழ்ந்தார்கள், நீருக்குள் சென்றார்கள்.''* Christian Institutions, p.17

*ரோமன் கத்தோலிக்க சபையைச் சார்ந்த பிரன்னர் என்பவர் : ''பதிமூன்று நூற்றாண்டுகளாக ஞானஸ்நானம் பொதுவாகவும், வழக்கமாகவும் ஒரு நபர் தண்ணீருக்குள் முழுக்கப்படுவதின் மூலமாக செய்யப்பட்டு வந்தது.''* – Historical Exhibition of the Adminisration of Baptism, p. 306

*''முழு நபரும் தண்ணீருக்குள் முழுக்கப்பட்டார்.''* – Kitto's Encyclopedia

*''ஞானஸ்நானம் என்பது தண்ணீருக்குள் அமிழ்த்துதல், அல்லது முழுக்குதல்.''* –Encyclopedia Americana

*''ஞானஸ்நானம் ஆதியில் முழுக்குதல் மூலம் கொடுக்கப்பட்டது.''* – Brande's Encyclopedia

*''ஞானஸ்நானம் என்றால் முழுக்குதல் ஆகும்.''* – Smith's Bible Dictionary

*''பேப்டைசோ என்பது தண்ணீருக்குள் அமிழ்த்துதல், அல்லது தண்ணீருக்கு அடியில் வைத்திருத்தல்.''* – Liddell and Scott's Greek Lexicon



*''முழுக்குவது அல்லது அமிழ்த்துவது.''* – Robinson's Greek Lexicon

*''முழுக்குவது, தண்ணீருக்கு அடியில் வைத்திருப்பது அல்லது அமிழ்த்துவது.''* – Greenfield's Lexicon

## யார் தண்ணீர் ஞானஸ்நானம் கொடுக்கலாம்

*பிரதிஷ்டை செய்து கொண்ட அனைவரும் – கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற அனைவரும் ''இராஜரீக ஆசாரியர்கள்'' ஆகவும், ஆண்டவரின் அபிஷேகம் பெற்ற சரீரத்தின் அங்கங்களாகவும் இருக்கிறார்கள்; ஆகவே, இவர்கள் மத். 28:19 ன்படி ஜனங்களுக்குப் போதிக்கவும், இதன் விளைவாக அவர்களை ஞானஸ்நானத்திற்கோ, அல்லது ஆண்டவரின் மரணத்திற்குள்ளாக அவர்களுடைய சித்தங்களை அடக்கம் செய்யும்படி வழி நடத்துபவர்களாகவோ நியமிக்கப் பட்டவர்களாகவும் அதோடுகூட, அதே வேளையில் இந்த பிரதிஷ்டைக்கு அடையாளமாக உள்ள தண்ணீர் ஞானஸ்நானத்தை கொடுக்கும்படியாகவும் நியமிக்கப்பட்டும் உள்ளார்கள். மேலும் இந்த அடையாள ஊழியத்திற்கென இப்படி பிரதிஷ்டை செய்து கொண்டவர் கிடைக்காவிட்டால், இதை ஒரு பிரதிஷ்டை செய்து கொள்ளாத ஒரு விசுவாசியோ, அல்லது உலகப் பிரகாரமான அவிசுவாசியான ஒருவர் இதை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவிக்க வலிமையான காரணத்தை நம்மால் பார்க்க இயலாமல் இருக்கிறது; எனென்றால் உண்மையான ஒப்பந்தம் என்பது ஆண்டவருக்கும் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளுகிற மனிதருக்கும் இடையிலானது, மேலும் தண்ணீர் ஞானஸ்நானம் என்பது உண்மையான ஒன்றல்ல, ஆனால் ஒரு விளக்கமாகத்தான் இருக்கிறது, ஆகவே அதை கொடுப்பவர் ஆண்டவர் அல்ல, ஒரு மனிதன் தான், அவன் நல்லவனோ அல்லது கெட்டவனோ, முழுக்கு ஞானஸ்நானம் பெறுபவரின் வசதிக்காக, அதை நிகழ்த்துபவராக ஒரு பிரதிநிதியாகத் தான் இருப்பார். இருந்தபோதிலும், சபைக்காரியங்களில் கடைபிடிக்கப்பட வேண்டிய பொதுவான தகுதியும் முறையும் உள்ளது, அதை இதிலும் கடைப்பிடிப்பது நல்லது; இது இப்படிப்பட்ட ஊழியங்களுக்கு மிகவும் சரியான நபர்களாக இருக்கிறவர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட மூப்பர்கள் தான் என்பதை வெளியரங்கமாக்கும்.*

## ஞானஸ்நானத்தின்போது பயன்படுத்தும் வார்த்தைகள்

வேதாகமத்தில் இப்படியான ஊழியத்திற்கென (ஞானஸ்நானத் திற்கென) பயன்படுத்த வேண்டிய குறிப்பான வார்த்தைகள் நமக்கு ஏதும் சொல்லப்படவில்லை; மேலும் வார்த்தைகள் இரண்டாவது முக்கியத்துவத்தைத்தான் பெறுகிறது என்பதை எல்லாரும் புரிந்துகொள்ள இயலும்; ஏனெனில் வார்த்தைகளே இல்லாவிட்டாலும் கூட ஞானஸ்நானம் அதன் தகுதியை இழந்துவிடாது; ஏனெனில் முன்னரே கூறியபடி, உண்மையான ஒப்பந்தம், ஞானஸ்நானம் பெற்றவருக்கும் ஆண்டவருக்கும் இடையிலானது; தண்ணீர் ஞானஸ்நானம் பெறுவது என்பது அதை பகிரங்கமாக அறிவிப்பதாகும்; ஆகவே ஞானஸ்நானம் கொடுப்பவர் எதை நம்புகிறார் அல்லது நம்பாமல் இருக்கிறார், எதை சொல்லுகிறார் அல்லது சொல்லாமல் விட்டுவிடுகிறார் என்பது முக்கியமல்ல, ஆனால் இப்படி அடையாளமாக இருக்கும்படியாக ஞானஸ்நானம் பெற்றவரின் இருதயத்தின் சிந்தனையும், நோக்கமும் என்ன என்பது தான் முக்கியம். இருந்தபோதிலும் மத் 28:19 ல் நம்முடைய ஆண்டவர் சொன்ன வார்த்தைகள் மேலும், ரோமர் 6:3ல் அப்போஸ்தலருடைய வார்த்தைகள் மேலும் நம்முடைய தீர்ப்பை வைத்து, இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் எளிமையான பலமான வார்த்தைகளை உபயோகிக்கும்படி கூறுகிறோம். உதாரணத்தை கீழே கொடுத்துள்ளோம்.

*''சகோதரர் ஜான் (இல்லையெனில் வேறு ஏதாவது கிறிஸ்தவ பெயர்) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினால், இந்த அதிகாரத்தின் மூலம் உனக்கு கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் கொடுக்கிறேன்.''*

## அடையாளத்தை திரும்பவும் செய்தல்.

ஞானஸ்நானத்தின் உண்மையான அர்த்தம் நம்முடைய பார்வையை விட்டு அகன்று வெகு காலமாகிவிட்டதால், ஏற்கனவே தண்ணீரில் முழுகினவர்களிடமிருந்து தாங்கள் எடுத்துக்கொண்ட ஞானஸ்நானத்தின் தகுதியைக் குறித்து அனேக கேள்விகள் வருகின்றன, அந்த அடையாளத்தை மறுபடியும் செய்வதா, வேண்டாமா என்றும் சந்தேகம் வருகிறது. இதற்கு எங்களுடைய பதில் என்னவெனில் அடையாளமானது





மறுபடியும் செய்யப்பட வேண்டியதில்லை என்பதாகும்; ஏனெனில், அது மரணபரியந்தம் முழு பிரதிஷ்டையினால் காக்கப்படாவிட்டால், ஒரு குளியல் அல்லது தண்ணீரில் முழ்கி எழும்புவது என்பதைத் தவிர வேறு அர்த்தமோ அல்லது உயர்வோ கிடையாது, எனவே ஒவ்வொருவரும் இந்த சாட்சியத்திற்கு தான் கீழ்ப்படிந்திருக்கிறேனா, இல்லையா என்பதை தானாக தீர்மானிக்க வேண்டும். மரணபரியந்தம் பிரதிஷ்டையை தொடர்ந்து தண்ணீர் ஞானஸ்நானம், இருக்குமானால், அதைக் குறித்து அறிவு குறைவானதாக இருந்தாலும், அதை மறுபடியும் செய்யத் தேவையில்லை.

## மரித்தவர்களுக்கு ஞானஸ்நானம்

*''மேலும் மரித்தோர் உயிர்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுபவர்கள் என்ன செய்வார்கள்?'' –1 கொரி. 15:29*

மேலே சொல்லப்பட்ட அப்போஸ்தலருடைய வார்த்தையின் அர்த்தத்தை தவறாக புரிந்து கொண்டபடியால், ''இருண்ட காலங்களின்'' போது ஒருவருக்காக இன்னொருவர் ஞானஸ்நானம் பெறுவதற்கு வழி வகுத்தது. கிறிஸ்துவ மக்கள், தங்களின் நண்பர்கள் ஞானஸ்நானம் பெறாமல் மரித்த போது அவர்களின் சார்பாக ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். உண்மையான ஞானஸ்நானம் எதனால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதை சரியாக நோக்கும்போது, இப்படிப்பட்ட ஒரு ஒழுங்கு முறையில் உள்ள முரண்பாடு உடனடியாக தெரிகிறது. ஒரு மனிதன் தனது சுபாவத்தையோ அல்லது ஆவிக்குரிய வாழ்க்கையையோ இன்னொருவருக்கு மாற்ற முடியாதது போன்று, ஒரு மனிதனும் இன்னொரு மனிதனுக்காக மறுபடியும் தன்னை பிதிஷ்டை செய்து கொள்ள முடியாது. அப்போஸ்தலருடைய வார்த்தைகளை இப்படி தவறாக புரிந்து கொண்டது, அப்போஸ்தலர்களின் மரணத்திற்கு பிறகு எப்படி ஒரு விசுவாசத் துரோகம் நேரிட்டது என்பதையும், அப்பொழுது புகுத்தப்பட்ட பழக்கவழக்கங்களும் அனேக கருத்துக்களும் எவ்வளவு காட்டுத்தனமானவும் காரணமில்லாமலும் இருந்தன என்பதையும் அறியத் தவறுகிற அநேகரின் மனதில் குழப்பத்தை உண்டு பண்ணியது.

அப்போஸ்தலரின் செய்தி மரித்தோரின் உயிர்தெழுதலைப் பற்றியதாக இருந்தது. இங்கே அவர் அந்த போதனையை ஆதரித்து

விளக்கமாக கூறுகிறார். மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து சபையின் விசுவாசம் கொரிந்துவில் தாக்குதலுக்குள்ளானது தெரிய வருகிறது. அப்போஸ்தலரின் விவாதத்தின் ஒரு பகுதியாக, நாம் பார்த்துக் கொண்டிருக்கிற வசனத்தின்படி, சபையினர் அனைவரும் ஞானஸ்நானம் பெற்றவர்கள் என்பதையும், நாம் முன்பு பார்த்த வண்ணம், அவர்கள் பெற்ற ஞானஸ்நானம் மரணத்திற்கு அடையாளமாக இருக்கிறது என்பதையும் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்தார். இப்பொழுதுள்ள புதிய நிலைமையில் உள்ள முரண்பாடுகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம், மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், அவர்களுடைய ஞானஸ்நானம் காட்டுகிறபடி அவர்களுடைய மரணபரியந்தம் என்று செய்யப்பட்ட அர்ப்பணிப்பின் தகுதி நிலையும் அதில் உள்ள ஞானமும் எங்கே என்று வினவுகிறார். அவர்கள் தங்களை அங்கங்களாக அர்ப்பணித்துள்ளார்கள் – ஒருவர் மற்றவரோடு மரிக்கவும், ஒருவருக்கொருவர் கிறிஸ்துவின் ஐக்கியத்தில் இருக்கவும், இதன்படியாக அவரோடு மரிக்கவும், மேலும் அவருடைய சரீரத்தின் அங்கங்களாகவும், மரித்தநிலையில் உள்ள உலகத்தார் சார்பில் செலுத்தப்பட்ட மாபெரும் பாவ நிவாரண பலியின் அங்கங்களாகவும், அவர்கள் தங்களை அர்பணித்துள்ளார்கள்; ஏனெனில் அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உயிர்த்தெழுதலில் நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

அப்போஸ்தலருடைய விவாதம் என்னவென்றால் முழு கிறிஸ்துவ நிலையும் ஒன்றாக நிற்க வேண்டும் அல்லது ஒன்றாக விழ வேண்டும். மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்கள் கெட்டிருப்பார்கள், மாத்திரமல்ல உலகத்தில் உள்ள மற்றவர்களும் அழிந்து போவார்கள். இப்படி சபைக்கு எதிர்கால நம்பிக்கை கிடையாது என்றால் நாம் ஏன் நம்முடைய வாழ்க்கையை மரண பரியந்தம் அர்ப்பணம் செய்ய வேண்டும்? நாம் கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுள்ளோம், மரித்தோருக்காக ஞானஸ்நானம் பெற்றுள்ளோம், எதற்காகவெனில் ஆபிரகாமின் வித்தாகவும் உலகத்திற்கு ஜீவன் கொடுக்கும்படியாகவும் கொஞ்சம் கொஞ்சமாக அவரோடு இணைந்திருக்கும்படியாக அப்படி செய்துள்ளோம்.